செம்மணி

நிலம் 3 துகள் 112 வள்ளுவர் ஆண்டு 2052, 10 - 16 புரட்டாதி 2022 வாரமலர் பக்கங்கள் 29

# ரணிலின் ஆட்சியும் மனித உரிமைகளை இனி மதிக்காது என்பது வெளிப்பட்டது

## ராஜாங்க அமைச்சர்கள் நியமனம் குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை



அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது அமைச்சரவையை விரிவாக்கியுள்ளார். 37 ராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்றுக்கொண்டுள்ளனர். அவர்களில் மூவர் கடுமையான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்போடு

பக்கம் 03



## எலிசபெத் ராணியின் மறைவுக்கு இலங்கையிலும் துக்கம் அனுஸ்டிப்பு

இங்கிலாந்தின் மாகாராணியான 2ஆம் எலிசபெத் தனது 96ஆவது வயதில் காலமானார். அவரது மறைவையொட்டி இலங்கையின் தேசியக் கொடி வெள்ளிக் கிழமை அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது. அதேநேரம் எதிர்வரும் 19ஆம் திகதியை துக்க தினமாக அறிவிக்குமாறு பொது நிர்வாக மற்றும் உள்துறை அமைச்சுக்கு அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

ராணி எலிசபெத் ஸ்திரத்தன்மையினதும் சகிப்புத்தன்மையினதும் சின்னமாக இருந்தவர்,

பக்கம் 03

## 200 மில்லியன் டொலர் அவசர கடன்

### ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து அவசர கடனாக 200 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெறுவதற்கான உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. மேலதிகமாக செழிப்பான மற்றும் நெகிழ்வான ஆசியா திட்டத்தின் கீழ் ஜப்பான் 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்குவதற்கான ஒப்பந்தத்திலும் கொழும்பு கையெழுத்திட்டுள்ளது.

"இலங்கை அரசு உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்சிக்கான அவசர உதவித் திட்டம் என்பவற்றுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் டொலரை கடனாகப் பெறத் திட்டமிட்டுள்ளது" என்று வெளியக வளங்கள் திணைக்களம் வெள்ளிக்கிழமை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பொருளாதார

பக்கம் 03

## இலங்கையை மீளக் கட்டியெழுப்ப நிதி சேகரிப்புத் திட்டம் தொடக்கம்

இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக உலகம் முழுவதும் இருந்து மக்களிடம் நிதி சேகரிக்கும் திட்டத்தை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் தொடங்கியுள்ளது. இணையத் தளம் மூலம் இந்த நிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பு இதன் மூலம் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் என்று ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் தெரிவித்துள்ளது.

மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துப் பொருட்கள் என்பவற்றை உறுதிப்படுத்த இந்த நிதி அவசியப்படுவதாக

பக்கம் 03

## சதோசவில் சில பொருள்களின் விலைகள் குறைப்பு

லங்கா சதொச விற்பனை நிலையங்களில் வெள்ளை அரிசி, வெள்ளை நாட்டரிசி, சிவப்பு பருப்பு, வெள்ளை சீனி மற்றும் நெத்தலி உள்ளடங்களாக 7 உணவு பொருட்களின் விலைகள் வெள்ளிக்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள லங்கா சதொச தலைமையகத்தில்

பக்கம் 02

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# ரணில் அப்படித்தான்!

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்ட மூவருக்கு இரா ஜாங்க அமைச்சு நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமகள் கண்காணிப்பகம் கடுமையான கண்டனங்க ளைத் தெரிவித்துள்ளது. மனித உரிமைகள் தொடர்பில் இந்த ஆட்சி அர்ப்பணிப்போடு செயற்படப்போவதில்லை என்பதற்கான ஆபத்தான அறிகுறி இது என்றும் அது தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கையோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர் பான தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியவர் ரணில் விக்கிரமசிங்க. அந்த அடிப்படையில் பார்க்கும் போது அவரது தற்போதைய குத்துக்கரணம் மனித உரி மைகள் கண்காணிப்பகத்திற்கு அதிர்ச்சியளிப்பதாக இருக் கலாம். ஆனால் அது ரணிலின் இயற்கைச் சுபாவம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்திய அமைதிப் பேச்சின்போது உள்ளக சுயாட்சி என்கிற தீர்வுக்கு இணங்கியவர் ரணில் விக்கிரமசிங்க. நோர்வே நாட்டின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட அந் தப் பேச்சில் அரசியல் தீர்வுக்கான இணக்கப்பாட்டை வெளிப்படுத்திய அதே ரணில் விக்கிரமசிங்கதான் போர் முடிவுக்கு வந்த பின்னர் கூட்டாட்சி (சமஷ்டி) என்கிற சொல்லைக்கூட அரசமைப்பில் இடம்பெறச் செய்ய முடியாது என்று கைவிரித்தவர்.

தான் ஆட்சியைப் பிடிக்கும்வரை காலி முகத் திடல் போராட்டங்களை மக்களின் உளக்கிடக்கை வெளிப்பாடு என்றவர் ஆட்சிக்கு வந்த பின்னர் அந்தப் போராட்டங் களைப் பயங்கரவாதம் என்றவர். அத்தோடு அந்தப் போராட்டங்களால் தான் பயனடைந்த உடனேயே அத னைக் காட்டிக்கொடுத்தவர். அதேபோன்று பயங்கர வாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று தனது முந்தைய ஆட்சியில் தெரிவித்தவர் இப்போது போராட் டக்காரர்களை ஒடுக்குவதற்கு அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துபவர்.

இப்படித் தனது அரசியல் வரலாறு முழுவதும் கொள் கைக் குத்துக்கரணங்களால் முழுமையாகச் சூழப்பட்ட வரான ரணில் விக்கிரமசிங்க இப்போது மனித உரிமை கள் மீறல் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டவர்களை இரா ஜாங்க அமைச்சர்களாக நியமித்திருப்பதில் ஆச்சரியம் ஏதும் இருக்கமுடியாது. தனது பதவியைத் தக்க வைப் பதற்கு பொது ஜன பெரமுன கட்சியின் சொற்கேட்டு நடப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. அத னால் அந்தக் கட்சியின் சொற்படி பிள்ளையான், லொகான் ரத்வத்த, சனத் நிசாந்த ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளார்.

சுய நலத்திற்காக மக்கள் நலன்களை அடகுவைப்பதற்கு ஒருபோதும் தயக்காத ரணில் விக்கிரமசிங்க போன்ற அரசியல்வாதிகளிடமிருந்து இந்த நாடு இதைவிடப் பெரிய தியாகங்களை எதிர்பார்ப்பது வீண்செயல். சந் தர்ப்பவாத அரசியல் மட்டுமே அவருக்குக் கைவந்த கலை. அவரிடம் மாற்றத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.



# போராட்டக்காரர்களை ஒடுக்குவதை உடன் நிறுத்து – மன்னிப்புச் சபை

இலங்கையில் ஆட்சி மாற றத்திற்கு வித்திட்ட அமை திப் போராட்டக்காரர்களை ஒடுக்கும் வகையில் ஆட்சி யாளர்களால் கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறை களை உடனடியாக முடிவுக் குக் கொண்டுவர வலியுறுத் தும் பரப்புரை ஒன்றை பன் னாட்டு மன்னிப்புச்சபை தனது இணையப் பக்கத்தில் தொடங்கியுள்ளது.

இலங்கை ஆட்சியாளர்கள் அமைதிப் போராட்டங்கள் மீது அடக்குமுறைகளைப் ஏவுவதுடன் போராட்டக் காரர்களை ஒடுக்கும் வகை யிலும் செயற்படுகின்றனர். இவை அமைதிப் போராட் டக்காரர்களைப் பாதுகாப்ப தற்கு அரசு தவறியுள்ள தையே காட்டுகின்றது என்று சுட்டிக்காட்டியிருக்கி றது பன்னாட்டு மன்னிப்புச் சபை.

போராட்டக்காரர்களுக்கு எதிரான படையினரின் பயன்பாட்டை முடிவிற்குக் கொண்டுவருவதன் மூலம் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரி மைக்கு மதிப்பளிப்பதுடன் அதனைப் பாதுக்கவேண் டும், போராட்டங்களில் கலந்துகொண்டோருக்கு எதிராக முன்வைக்கப்பட் டுள்ள அனைத்துக் குற்றச் சாட்டுக்களும் நீக்கப்படு வதுடன் கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும், பயங்கர வாத்தடைச்சட் டத்தை முற்றாக நீக்குவது டன் அதுவரையில் அச் சட்டத்தின் பயன்பாடு உடனடியாக இடைநிறுத்தப் படவேண்டும் என்ற 3 விடயங்களைத் தனது பரப்புரையில் முன்வைத் துள்ளது மன்னிப்புச் சபை.

அதற்குரிய நடவடிக்கை களை அரச தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்னெடுக்க வேண்டுமென வலியுறுத்தி சர்வதேச மன்னிப்புச்சபை அதன் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்தில் மனுவொன்றை வெளியிட் டுள்ளது. தமது பெயர், மின்னஞ்சல் முகவரி, வசிக் கும் நாடு ஆகிய விபரங் களை வழங்குவதன் மூலம் அம்மனுவில் கையெழுத் திடுமாறும் மன்னிப்புச்சபை கோரிக்கைவிடுத்துள்ளது.

## சதோசவில்...

வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர் தன இதனைத் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் வெள்ளை அரிசி ஒரு கிலோ கிராமின் விலை 10 ரூபாவினாலும், இறக்குமதி செய்யப் படும் நாட்டரிசி ஒரு கிலோ கிராமின் விலை 4 ரூபாவி னாலும், ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் விலை 19 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பின் விலை 31 ரூபாவினாலும், இறக்குமதி செய்யப்படும் நெத்தலி ஒரு கிலோ கிராமின் விலை 25 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் வெள்ளை பூண்டின் விலை 155 ரூபா வினாலும், ஒரு கிலோ கிராம் கடலை பருப்பின் விலை 60 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

குறைந்த வருமானம் பெறும் தோட்ட தொழிலாளர்கள் உள்ள பிரதேசங்களில் உள்ள சதொச விற்பனை நிலை யங்கள் ஊடாக ஒரு கிலோ கிராம் கோதுமை மாவினை 310 ரூபாவுக்கு விற்பனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## ரணிலின்...

செயற்படவில்லை என்பதையே அவர்களின் நியமனங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்று எச்சரித்துள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.
"ரணிலின் புதிய ஆட்சி மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் குற்றவாளிகள் தண்டிக்காது விடப்படும் போக்கை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் அர்ப்பணிப்போடு செயற்படாது என்பதற்கான ஆபத்தான அறிகுறியாக நியமிக்கப்பட்டவர்களில் மூவர் கடுமையான மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்கள்" என்று கண்காணிப்பகம் வியாழக்கிழமை விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.
அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்றை அமைப்பதற்கான ரணிலின் முயற்சிகள் படுதோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து பெரும்பாலும் ஆளும் பொது ஜன பெரமுன கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கொண்ட 37 ராஜாங்க அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் வெள்ளிக்கிழமை பதவியேற்றுக்கொண்டனர்.
பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்களில் ஒருவர். அவர் மீது சிறுவர்களைக் கடத்தியது உள்ளிட்ட மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்கிறது கண்காணிப்பகம்.
விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முன்னர் இணைந்திருந்த பிள்ளையான் கருணாவின் பிரிவுடன் அரச தரப்புக்கு ஆதரவான ஆயுதக் குழுவாக இயங்கத் தொடங்கினார். அவர் சிறுவர்களை படைக்கு ஆட்சேர்ப்பு செய்த குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பில் குற்றச்சாட்டப்பட்டிருந்த பிள்ளையான் மீதான குற்றச்சாட்டுக்களை சட்ட மா அதிபர் திணைக்கம் விலக்கியிருந்தது
மற்றொரு ராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த. இவர் தமிழ் அரசியல் கைதிகளை சிறையில் வைத்து துப்பாகி முனையில் அச்சுறுத்தியவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர். இதனால் சிறைத்துறை இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகியவர்.
மூன்றாவது அமைச்சர் சனத் நிசாந்த. அரசுக்கு எதிராக காலி முகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக காவல்துறையினரின் விசாரணையின் கீழ் இருப்பவர். வைகாசி (மே) 15ஆம் நாள் அவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். ஒரு மாதம் கழித்து அவருக்குப் பிணை கிடைத்தது.
அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் மட்டுமல்ல, இலங்கை ஆட்சிக்கு கதிரான போராட்டக்காரர்களை ரணில் விக்கிரமசிங்க அடக்கி ஒடுக்கிய விதம் குறித்தும் கண்காணிப்பகம் கவலை தெரிவித்துள்ளது.
அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்ப்பாளர்களை வலுக்கட்டாயமாக கலைக்க படையினரைப் பயன்படுத்தி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஏராளமானவர்களைக் கைது செய்ததன் மூலம் கடுமையான ஒடுக்குமுறையை விரைவாகத் தொடங்கினார். கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி எந்தக் குற்றச்சாட்டுக்களும் இன்றி தடுத்து வைத்துள்ளார் என்றும் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளார்.

---

## 200 மில்லியன்...

நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் உணவு மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான நோக்கத்தோடு இந்தக் கடனுதவி பெறப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்திற்கான நிதி உதவியாகவே ஜப்பான் 3 மில்லியன் டொலரை வழங்குகின்றது. ஆக மொத்தம் 203 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி அவசரமாகக் கிடைக்கவுள்ளது. இதில் அரசின் பங்காக 0.36 மில்லியன் டொலர் வழங்கப்படும்.
பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக குடும்பங்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நேரடியாக நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளது.

---

## எலிசபெத்....

அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்று தனது இரங்கல் செய்தியில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நாடு பிரிட்டிஷிடமிருந்து விடுதலை பெற்ற பின்னரும் 1952 முதல் 1972 வரை இலங்கையின் ராணியாகப் பதவி வகித்தவர் இரண்டாம் எலிசபெத்.
இலங்கை நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை தனது கூட்டத் தொடரை தொடங்குவதற்கு முன்னர் ராணியின் மறைவிற்கு 2 நிமிடங்கள் அஞ்சலி செலுத்தியது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோரும் ராணியின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

---

## இலங்கையை...

ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் உணவு மற்றும் சுகாதாரத்துறை ஆகியவற்றில் ஒன்றை அல்லது இரண்டையும் தெரிவு செய்து உதவ முடியும். இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பது முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் வெளிப்படுத்தப்படும் என்று ஐ.நா. உதவிப் பொதுச் செயலாளர் நாயகமும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட பிராந்தியப் பணிப்பாளருமான கனி விக்னராஜா தெரிவித்தார்.

# தான் போகுமிடமெல்லாம் தனது குருதியையும் எடுத்துச் சென்ற மகாராணி...!

நிலவழகி

உலகம் முழுதும் தனது சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி நிர்வகம் நடத்திய நாடு பிரித்தானியா. சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் என வர்ணிக்கப்பட்டது. பிரித்தானியாவின் ஆளுகைக்குட்பட்ட ஏதாவது ஒரு பிரதேசம் பகலாக இருந்துகொண்டேயிருக்கும் என்பதே அதன் அர்த்தம். தனது காலணித்துவத்தின் கீழ் உலக நாடுகளை அடிமையாக்கி அவற்றின் வழங்கலைச் சுரண்டி வளர்ச்சி கண்ட அதிகாரமிக்க நாட்டின் 2ஆம் எலிசபெத் மகாராணியார் தனது 96 ஆவது வயதில் காலமாகியிருக்கிறார். 70ஆண்டுகள் முடிக்குரிய சீமாட்டியாக வாழ்ந்திருக்கிறார். 2ஆம் உலகப்போர்க் காலத்தில் பிரித்தானியா போரில் ஈடுபட்டது. அந்த நாட்டின் தலைமை அமைச்சர் வின்சர் சேர்ச்சில் இந்தப்



போரில் மிகப் பெரிய பங்கை வகித்தார். அந்தப் போர் காரணமாகப் பிரித்தானிய உயர் குலாத்தினரும் ஏனைய மக்களும் பிரித்தானியாவை விட்டு வெளியேறியபோது அரச குடும்பம் மாத்திரம் தமது நாட்டையும் மக்களையும் விட்டு வெளியேறாது அங்கேயே இருந்தது. அதற்கான மதிப்பைப் பிரித்தானிய மக்கள் அரச குடும்பத்துக்குத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றனர். ஜனநாயக ஆட்சிக்கு மதிப்பளிப்பதுபோல அரசாட்சிக்கும் அரச வர்க்கத்தினருக்கும் மதிப்பளிக்கிறார்கள்.

**அரண்மனை வாழ்க்கை**

அரச குலத்தினரின் பிற்பட்ட கால அரண்மனை வாழ்க்கை என்பது மற்றவர்கள் நினைப்பதுபோல சுதந்திரமானதல்ல என்று அரசகுடும்பங்களைச் சார்ந்தவர்களால் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சட்ட திட்டங்கள், நெறிமுறைகள், நடத்தைகள், மதிப்பு, தனித்துவம், சடங்குகள், சம்பிரதாயங்கள் எனப் பல தனித்துவங்களுடன் சம்பந்தப்பட்டது அது. இதனால் திரும்பும் இடமெல்லாம் சுதந்திரமற்ற தன்மை, யாராவது பார்த்து விடக்கூடாது என்ற பயம், நம்பிக்கையானவர்களையே அரண்மனைப் பணியாளர்களாக வைத்திருப் பது, யராவது நெறி தவறினால் தண்டிக்கும் நிலை என அரண்மனை வாழ்க்கை வேறு பட்டதாக இருந்தது.

இதைவிட துக்கத்தின்போது அழாமலும் மகிழ்ச்சியின்போது சிரிக்காமலும் எப்போதும் உணர்ச் சிகளைக் கம்பீரமாக வைத்தி ருக்கவேண்டிய தேவையும் இருந்தது. ராணியின் மருமகளான டயான அரச குடும்பத்தைச் சேராதவராக இருந்ததால் இந்த விடயங்களுக்கு திருமணத்துக்கு முன்னதாக சிறப்புப் பயிற்சிகள் பலவற்றைப் பெற்றார் என்ற கருத்துண்டு. சாதாரண வாழ்க்கையை விட செயற்கையான அரச வாழ்க்கை டயானாவுக்கு ஒத்துவரவில்லை என்பது டயானாவுக்குச் சிக்க லாக அமைந்தது. அந்த வகையில் ஓர் அரச குடும்பத்துக்குரிய (றோயல் பெமிலி) கட்ட மைப்புக்களை 70வருடங்களாகத் தனது கையில் வைத்திருந்த பெருமை 2ஆவது எலிசபெத் மகாராணிக்கு உண்டு.

**குருதி கொண்டு செல்லும் நிலை**

"பிளெட் இஸ் சிக்கதென் வோட்டர்" - தண்ணீரைவிட குருதி தடிப்பானது என்கிற ஆங்கிலப் பழமொழி ஒன்றுண்டு. அதாவது குருதி வழியுறவு வலுவானது என்பதே இதன் அர்த்தம். இதனால் தமது உறவுக்குள் - வம்சத்துக்குள் வேறு வழிக் குருதிப் பிணைப்பை இலாவகமாகத் தவிர்த்தார் மகாராணி. அந்த வகையில் மகாராணி அரண்மனையை விட்டு வெளியே பயணிக்கும்போது அவரது மருத்துவர்கள் மகாராணியின் உடலிலிருந்து பெறப்பட்ட குருதியையும் கூடவே எடுத்துச்செல்வார்கள். மகாராணிக்கு விபத்துகள் நிகழ்ந்தால் வேறு யாராவது நபர்களின் குருதியை அவரது உடலில் செலுத்துவதைத் தவிர்த்துத் தனது குருதியை ஏற்றிக்கொள்ளும் திட்டமே அது. வேறு குருதிக் கலப்பால் அரச குடும்பத்தின் தரத்தில் குறைவு அல்லது இழுக்கு ஏற்பட்டுவிடும் என்பதே மகாராணியின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதைத் தனது வாழ்நாளில் தொடர்ந்தும் கடைப்பிடித்தார் என்று சொல்லப்படுகிறது.

பெண் அரசியாக 20ஆம் நூற்றாண்டின் அரைநூற்றாண்டு காலத்தையும் 21ஆம் நூற்றாண்டின் கால்பகுதியையும் தனது கீரிடத்தால் கட்டுக்குள் வைத்திருந்தார். பிரித்தானியா சாம்ராஜ்ஜியக் கட்டமைப்பிலிருந்து சரிந்து போனபோதிலும் மாட்சிமை பொருந்திய மகாராணி ஒருவர் அதன் எச்சங்களைப் பேணியிருந்தார் என்பதில் 2ஆம் எலிசபெத் மகாராணிக்குப் பிரித்தானிய வரலாற்றில் மட்டுமல்லாது உலக வரலாற்றிலும் தனி யிடம் இருக்கவே செய்யும். அவர் ஒரு சிறந்த பெண் ஆளுமை என்பதில் உலகப் பெண்கள் அனைவரும் பெருமை கொள்ளவும் முடியும்.



நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

32



## புகை வண்டியாவது ஏன்...?

புகை வண்டி கேள்விப்பட்டிருக்கிறோம். நீராவி, நிலக்கரியில் இயங்கத் தொடங்கிய தொடருந்தானது அதிகளவில் புகையை வெளியேற்றுவதால் புகை வண்டி என்றானது. அதன் இயந்திரம் பெரிதாக இறியருப்பதால் எரிபொருள்களைப் பாவித்து இயங்கும் இந்தக் காலத்திலும் அதிக புகையை வெளியேற்றுவதால் புகை வண்டி என்கிற பெயர் அதற்கு நீடிக்கிறது. ஆனால் ரயிலைவிட நம்மவர்களின் சிறிய சிறிய வாகனங்கள் பலவும் அளவுக்கதிக புகையை வெளியேற்றிப் புகைவண்டி போல ஓடித் திரியும் அவலத்தை ஊர்களில் காணலாம். ஏன் அப்படிச் சிறிய ஊர்திகள் அதிக புகையை வெளியேற்றுகின்றன...? அவை புகை வண்டிகளானதற்குக் காரணம் என்ன...? அதைத் தடுப்பதற்கோ, புகைக்குத் தீர்வு காண்பதற்கோ வழியிருக்கிறதா...?

நம்மவர்கள் பயன்படுத்தும் சிறிய சிறிய வாகனங்கள் எல்லாம் அதிக புகையை வெளியேற்றுவதற்குக் காரணம் அவை சரிவரப் பராமரிக்கப்படாமல் போனதே ஆகும். வாகனங்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் பராமரிப்பு முக்கியமானது. சாதாரணமாகவே வாகனங்கள் காற்றையும் வெப்பத்தையும் வெளியேற்றும் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டிருக்கும். மோட்டார் வாகனத்தின் இயந்திரமானது எரிபொருளை மாத்திரம் உள்ளெடுத்து இயங்குவதில்லை. எரிபொருளுடன் காற்றையும் உள்வாங்கியே இயங்கும். இதில் காற்று, எரிபொருள் ஆகியன உள்ளெடுக்கும் அளவு எந்த விகிதத்தில் இருக்கவேண்டும் என்பது இயந்திரங்களைப் பொறுத்து அமைந்திருக்கும். இந்த இரண்டில் ஏதோனும் ஒன்று அதிகளவிலோ, குறைந்த அளவிலோ இயந்திரத்தால் உள்வாங்கப்படும்போது இயந்திரத்தில் கேளாறு உண்டாகிப் புகை வெளியேறத் தொடங்கும்.

காற்றை வடிகட்டி இயந்திரத்துக்கு வழங்குவதற்காக வாகனங்களில் எயார் பில்டர் எனப்படும் காற்று வடிகட்டி பொருத்தப்பட்டிருக்கும். அந்த வடிகட்டியானது குறிப்பிட்ட அளவான காலப் பாவனையைக் கொண்டிருக்கும். அதன் பின்னர் அந்த வடிகட்டியானது தூசு, துணிக்கைகளால் நிறைந்து காற்றை வடிகட்டி இயந்திரத்துக்குள் அனுப்பும் திறனை இழந்துவிடும். இதனால் இயந்திரத்துக்குத் தேவையான காற்றுக் கிடைக்காமல் போகக் காற்றுக்குப் பதிலாக எரிபொருளை இயந்திரம் நுகரத் தொடங்கும். இதனால் அதிகளவு எரிபொருள்

# புதிய கட்சிகளும் இனவாத நீட்சியும்...!

வி.அருணாசலம்

சிங்களவர் மத்தியில் மிக நீண்ட காலமாகச் செல்வாக்குப் பெற்றிருந்த கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன முக்கியமானவை. தாய்க் கட்சிகள் என்று போற்றப்பட்ட இவையே காலங் காலமாக மாறி மாறி ஆட்சியும் அமைத்தன. ராஜபக்சாக்கள் தாமரை மொட்டுச் சின்னத்தில் பொது ஜன பெரமுன என்ற கட்சியை தொடங்கினார்கள். 2018ஆம் ஆண்டில் நடந்த உள்ளூரட்சி சபைத் தேர்தலில் அந்தக் கட்சி அமோக வெற்றியைப் பெற்றது. 2019இல் அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகக் கோத்தாபய ராஜபக்ச நியமிக்கப்பட்டார். 69 லட்சம் வாக்குகளைப் பெற்றார். 2020 பொதுத் தேர்தலில் அந்தக் கட்சியே அதிக ஆசனங்களைப் பெற்றது. இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் ஆசனத்தைக் கூடப் பெறவில்லை. அதேவேளை சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் பெருமளவு நலிவடைந்தது.

**புதிய கட்சிகள்**

தாய்க் கட்சிகள் நலிவடைந்திருந்த நிலையில் மக்கள் புரட்சியால் கோத்தாபய பதவி துறந்தார். இதனால் பொது ஜன பெரமுனவும் நிலையிழந்தது. இந்த நிலையில் புதிய கட்சிகள் பல சிங்கள மக்கள் மத்தியில் எழுச்சி பெற்றுள்ளன. தோல்வியைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சி மீளவும் தலையெடுத்தது. சிறி லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிய குமார்வெல்கம, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் நவ லங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் ஒரு கட்சியைத் தொடங்கினார்கள். விமல் வீரவன்ச தலைமையில் இன்னோர் கட்சி உருவாகியுள்ளது. ஜே.வி.பி. புறமொதுக்கப்பட்டிருக்கிறது. சந்திரிகா அரச தலைவர் ஆனபோது ஜே.வி.பி. சந்திரிகாவுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் இறங்கிய போது தமது செல்வாக்குப் பகுதிகளில் தமது வேட்பாளர்களை மிக நுட்பமாகப் பட்டியலிட்டதால் ஜே.வி.பி. முதற் தடவையாக 22 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றிருந்தது. அதன் பின்னர் அந்தக் கட்சியின் மக்கள் செல்வாக்கு அதிகமாக இருந்ததில்லை. ஜே.வி.பி, சிறி

உள்ளெடுக்கப்படுவதுடன் அது தேவைக்கு அதிகமாக இயந்திரத்துக்குள் செல்வதால் எரிதிறன் அதிகரித்து எரிபொருள் அளவுக்கு அதிகமாக எரிக்கப்படும். இதனால் வண்டி புகையை வெளியேற்றும். எனவே வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள காற்று வடிகட்டியை அதன் பாவனைக் கால முடிவுடன் மாற்றிக்கொள்ளவேண்டும். குறிப்பிட்டளவு கிலோ மீற்றர்களுக்கு ஒருதடவையோ, அல்லது வருடத்துக்கு ஒரு தடவையோ அதன் பாவனைத் தரத்தை அறிந்து எயார் பில்டரை மாற்றிக்கொள்ளவேண்டும். சிலர் எயார் பில்ட்ரைச் சுத்தம் செய்து பொருத்திக் கொள்வதும் உண்டு. அவ்வாறு பொருத்தும்போது அதன் தரம் குறையாமல் இருப்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். தனக்குரிய பணியைச் செய்யாத எயார் பில்டரால் எவ்வித பயனுமில்லை.

இவை தவிர வாகனப் புகைக்கு வண்டி ஒயில் (உராய்வு நீக்கி எண்ணெய்) மற்றும் வாகன இயந்திரங்களைக் குளிர்விப்பதற்கு இடப்படும் திரவம் ஆகியனவும் காரணமாக இருக்கின்றன. காற்று வடிகட்டியில் ஏற்படுகின்ற பிரச்சினையால் கறுப்பு நிறத்தில் புகை வெளியேறும். குளிர் பருவத்தில் வெளிப்புற வெப்பநிலையை ஈடுசெய்யும் பொருட்டு வெள்ளை நிறத்தில் புகை வெளிப்படுவது அதிகம். இதைவிடச் சாம்பல், நீலம் ஆகிய நிறங்களிலும் புகை வெளியேறுகின்றது. இயந்திரத்தின் உள்ளகத்தில் ஏற்படுகின்ற உராய்வுகள், மற்றும் வெடிப்புகளால் குளிராக்கித் திரவக் கசிவு ஏற்பட்டு இந்த நிறங்களில் புகைகள் வெளியேறுகின்றன. எனினும் இந்தப் புகை வெளியேற்றம் அரிதாகவே இடம்பெறுகிறது. காற்று வடிகட்டியைச் சரியாகக் கவனிக்காமையினாலேயே நம்மவர்களின் வாகனங்கள் அதிகம் புகைக்கின்றன.....!

லங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.க ஆகியன இப்போது நலிவடைந்திருக்கப் புதிதாகப் பல கட்சிகள் உருவெடுத்துள்ளன.

**இனவாத நீட்சி**

இதுவரை காலமும் இலங்கை அரசியலில் இனவாதத்தை அதிகம் கக்கிய கட்சி ஜே.வி.பி ஆகும். அந்தக் கட்சியின் பரப்புரைப் பீரங்கியாக இருந்த விமல் வீரவன்சவை அந்தக் கட்சியிலிருந்து பிரித்தெடுத்து மகிந்த அணியினர் தம்முடன் இணைத்துக்கொண்டதால் ஜே.வி.பியைவிட அதிகளவில் இனவாதக் கருத்துகளைச் சிங்க மக்கள் மத்தியில் பரப்புவதில் மகிந்த அணி முன்னணிக்கு வந்தது. அதனுடன் போட்டி போட முடியாத நிலை ஜே.வி.பிக்கு ஏற்பட்டதால் நாடாளுமன்றத் தேர்தலில் பின்னடைவைச் சந்தித்தது.

2009இல் மகிந்த அணி 30 வருட கால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததால் மகிந்த ராஜபக்ச இரண்டாம் துட்டகைமுனு என்ற போர்வையில் எழுச்சியடைந்தார். அந்த இனவாதத் தொடர்ச்சியால் தான் பின்வந்த காலங்களில் சிங்கள மக்களின் செல்வாக்கை அதிகம் பெற்ற அந்தக் கட்சி அரசியலில் கோலோச்சியது.

தற்போது சிங்களவர் மத்தியில் பல கட்சிகள் தோன்றியுள்ளன. அவற்றின் அடிப்படையும் இனவாதமாகவே இருக்கிறது. அவ்வாறு இருந்தால் மட்டுமே சிங்களவர் மத்தியில் செல்வாக்குப் பெற முடியும் என்ற நிலையே இதற்குக் காரணம் ஆகும். அவ்வாறான கட்சிகளுக்கே பௌத்த மதத்தின் ஆசீர்வாதமும் உண்டு. தற்போதைய புதிய கட்சிகளில் முஸ்லிம்களோ, தமிழரோ சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். சிங்கள மக்களின் கட்சிகளாகவே இவை முன்னெடுக்கப்படுவதால் எதிர்காலத்தில் சிறுபான்மை இனங்கள் மீதான அழுத்தங்கள், நெருக்கீடுகள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

**தற்போது சிங்களவர் மத்தியில் பல கட்சிகள் தோன்றியுள்ளன. அவற்றின் அடிப்படையும் இனவாதமாகவே இருக்கிறது. அவ்வாறு இருந்தால் மட்டுமே சிங்களவர் மத்தியில் செல்வாக்குப் பெற முடியும் என்ற நிலையே இதற்குக் காரணம் ஆகும். அவ்வாறான கட்சிகளுக்கே பௌத்த மதத்தின் ஆசீர்வாதமும் உண்டு.**




சிங்களத் தேசிய மயப்படுத்தல் என்ற விடயம், மதம், கலாசாரம், பொருளாதாரம், அரசியல் என்பவற்றால் மீளுருவாக்கப்பட்டு வருகிறது. இது ஏற்கனவே இருந்த சிங்களப் பேரினவாத நீட்சியாகச் சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளது. இதில் கொமினிஸ்ட் கட்சிகளும் கரம்கோர்த்துள்ளன. இந்தப் புதிய கட்சிகள் ஊழலை இல்லாது செய்ய வேண்டும், குடும்ப ஆட்சியை இல்லாதொழிக்க வேண்டும் ஆகிய தலைப்புகளில் முழக்கமிடும் கட்சிகளாக இருப்பினும் அடிப்படையில் இனவாதத்தின் நீட்சியாகவே பரிணமித்திருக்கின்றன. இந்தக் கட்சிகள் பௌத்த பரவலுக்கு எதிராகவோ, படை மயமாக்கலுக்கு எதிராகவோ, போர்க்குற்ற விடயங்களிலோ, சிங்களக் குடியேற்ற விடயங்களிலோ எதிர்த்து நிற்கப் போவதில்லை. புதிதாகப் பேசப்படும் கூட்டாட்சித் தத்துவத்தில் கூட இனவாத நீட்சிக் கட்சிகள் பல ஒன்றிணைந்து செயற்பட வாய்ப்புண்டு.

இதுவரை காலமும் முன்னெடுத்துச் செல்கின்ற அரசியலாலும், நல்லாட்சி போன்ற தமக்குச் சாதகமான ஆட்சி நிலவிய காலத்திலும் தமிழ்த் தலைவர்களால் தமிழருக்கான அடிப்படை விடயங்களைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாவில்லை. இத்தகைய அரசியல் அறிவுள்ளவர்களால் இனிவரும் இலங்கை அரசியல் சூழலை இலகுவாக வெற்றி கொள்ள முடியாது. சிங்கள இனவாதத்துக்கு எதிராக மறுத்தான் கொடுக்கும் வகையில் வடக்குக் கிழக்கில் தமிழ்க் கட்சிகள் தமிழர் மத்தியில் இனவாதத்தைக் கக்கியே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுகின்றன. அவ்வாறு பெற்று நாடாளுமன்றம் சென்று ஆட்சியமைப்போருக்குச் சார்பாக முடிவெடுக்கும் நிலையே தொடர்கிறது. இவையெல்லாம் இனி இலங்கையில் இனவாதச் சிந்தனைகள் மலிந்திருக்கும் என்பதையே காட்டுகின்றன.

# பொருளாதாரப் பாதிப்புக்களை எதிர்கொள்ளல்...!

மருத்துவர் சி. யமுனாநந்தா

இலங்கையில் நிகழும் பொருளாதாரப் பேரிடர்களை எதிர்கொள்வதற்குத் தமிழர்கள் அதன் வியாபகத்தை வகுத்து அறிதல் இன்றியமையாதது. இந்தப் பாதிப்புக்களை பின்வரும் வகைப்படுத்தல் ஊடாக அறியலாம்.

1) அன்றாடப் பிரச்சினைகள்
2) சமூகப் பிரச்சினைகள்
3) மருத்துவப் பிரச்சினைகள்
4) வர்த்தகப் பிரச்சினைகள்
5) அரசியல் பிரச்சினைகள்
6) இராணுவப் பிரச்சினைகள்
7) மனித உரிமைப் பிரச்சினைகள்
8) பூகோள அரசியல் பிரச்சினைகள்

**1. அன்றாட வாழ்வியல் பிரச்சினைகள்**

பொருட்களின் விலையேற்றம், சம்பளப் பற்றாக்குறை, கடன் அதிகரித்தல் என்பன மக்களுக்கு அன்றாடப் பிரச்சினைகளாக இருக்கின்றன. வீடுகளில் 3 வேளை உணவு கிடைத்தல் அரிதாதல், 2 வேளை உணவு கிடைத்தல் அரிதாதல், ஒரு வேளை உணவு கிடைத்தல் அரிதாதல் எனப் பசியும் பட்டினியும் அதிகரிக்கும் தன்மை காணப்படுகின்றது. போசாக்குள்ள உணவுகிடைத்தல் அரிதாகின்றது. விறகு, எரிபொருள் கிடைத்தல் அரிதாகின்றது. போக்குவரத்துச் செலவீனம் அதிகரிக்கின்றது. பாடசாலை மாணவர்கள் உணவுத் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படுவதுடன் பாடசாலை இடைவிலகல்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது. பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு மேலதிக கல்வியூட்டச் சிரமப்படுகின்றனர். பொருட்களின் விலையேற்றம், மருந்துகளின் விலையேற்றம் என்பன சிகிச்சைச் செலவீனங்களை அதிகரித்துள்ளது. நீர்க்கட்டண அதிகரிப்பு, மின்சாரக் கட்டண அதிகரிப்பு, தொலைபேசிக் கட்டண அதிகரிப்பு என இன்னோரன்ன கட்டண அதிகரிப்புக்களும் ஒவ்வொரு குடும்பத்தையும் பாதிக்கின்றன. அன்றாட வேலை வாய்ப்புக் குன்றுகின்றது. இத்தகைய வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள குடும்ப மட்டத்தில் நம்பிக்கையினை உருவாக்க வேண்டும். உற்பத்தி சார்ந்த வேலைத்திட்டங்கள் அவசியம். கூட்டுறவு அமைப்புக்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

**2. சமூகப் பிரச்சினைகள்**

குடும்ப வன்முறைகள், உயிர்மாய்ப்புகள், போதைப் பொருள் பாவனை என்பன அதிகரித்த வண்ணம் உள்ளன. சமூகத்தில் வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய தொழில் முயற்சிகள் குறைவடைந்து காணப்படுகின்றன. பாடசாலை விலகல்கள் அதிகரித்துச் சிறுவர்கள் வேலைக்குச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. சிறுவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் வீதமும் அதிக ரித்துள்ளது. இலங்கையின் வடமாகாணம் தென்கிழக்காசி யாவில் பிரதான போதை வியாபார மத்திய நிலையமாக மாறும் ஆபத்துள்ளது. வேலைவாய்ப்பு இன்மையும் பாடசாலை விலகலும் போதை வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நிலையினை ஏற்படுத்தும் ஆபத்து உள்ளது.



**3. மருத்துவப் பிரச்சினைகள்**

மக்களின் மந்த போசனை தொற்று நோய்த் தாக்கத்தை அதிகப்படுத்தும். மருந்துகளின் விலையேற்றம், அத்தியாவசியமான மருந்துகளிற்கும், மருத்துவ ஆய்வுகூட இரசாயனங்களுக்கும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், துணை மருத்துவ உத்தியோகத்தர்கள் புலம்பெயரும் நிலைமை உருவாகி உள்ளது. இதனால் சுகாதார சேவை வழங்கல் மட்டுமல்ல சுகாதாரக் கட்டமைப்பும் தளர் வடையும் ஆபத்து உள்ளது.

**4. வர்த்தப் பிரச்சினைகள்**

பொருட்களின் விலையேற்றம், பொருட்கள் பற்றாக்குறை வர்த்தக நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்தியா அவசியப் பொருட்களின் விலை மலையேறியுள்ளது. பங்கீட்டு அடிப்படையில் அத்தியா அவசியப் பொருட்களை பகிர்ந்தளித்தல், மானியங்கள் வழங்குதல் வர்த்தகம்சார் பொருளாதார நெருக்கடியில் கையாள வேண்டிய நடவடிக்கைகளாகும்.

**5. விவசாயப் பிரச்சினைகள்**

விவசாய மேன்மை பட்டினிச் சாவினைத் தடுக்கும். தற்போதைய சூழலில் கமத்தொழில் விஸ்தரிப்பை வலுவூட்ட வேண்டும். விளைச்சல் தரும் நெல்லினங்களைப் பயிரிடல் வேண்டும். குரக்கன், சாமை, தினை சாகுபடியில் ஈடுபட வேண்டும். மரவள்ளி செய்கையை ஊக்குவிக்க வேண்டும். விவசாயச் சங்கங்கள், கூட்டுப் பண்ணைகள் என்பன உருவாக்கப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம், கிருமிநாசினி, விதைநெல் மற்றும் விவசாய உள்ளீடுகள் அளிக்கப்படல் வேண்டும். விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் இலக்கு பேணப்படல் வேண்டும். விளை பொருட்களை உரிய விலைகளில்சந்தைப்படுத்தல் வேண்டும்.

கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு என்பன ஊக்குவிக்கப்படல் வேண்டும். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அரச உத்தியோகத்தர்கள் சம்பள உயர்வை எதிர்பார்த்துக் காத்திராது விவசாயம், பண்ணைகள் என்பவற்றையும் மேற்கொள்ளல் வேண்டும். மேலும் சிறுகைத்தொழில்கள், ஆடைத் தொழில், மீன்பிடித்தல் போன்றவைகளும் கிராமக் கட்டமைப்புக்கள் மூலம் ஊக்குவிக்கப்படல் வேண்டும். மேலும் ஆடம்பரச் செலவுகள், கேளிக்கைக் கொண்டாட்டங்கள் என்பவற்றைத் தவிர்த்து உணவு உற்பத்தியில் முதலீடு செய்தல் மிகவும் அவசியமானதாகும்.

**இலங்கை அரசிடம் மிகப் பெரிய தேவையற்ற இராணுவ ஆளணி உள்ளது. ஆனால் அதை இயக்குவதற்குத் தேவையான மொத்தத் தேசிய உற்பத்தி குறைவாகவே உள்ளது**



**6. அரசியல் பிரச்சினைகள்**

பொருளாதார நெருக்கீட்டினால் அரசியல் பிரச்சினைகள் உருவாகலாம். அரசியல் பிரச்சினைகளால் பொருளாதார நெருக்கீடுகள் அதிகரிக்கலாம். இது ஒரு விசச் சக்கரம்போல் தொடரும். இலங்கையின் பொருளாதாரப் பேரிடருக்கு இலங்கையின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமையும் பிரதான காரணமாகும். குறிப்பாக இலங்கை அரசு தமிழர்களை அடக்குவதற்காக பெருமளவான படைச் செலவீனங்களைத் தொடர்ந்து செய்து கொண்டுள்ளது. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் படை ஆக்கிரமிப்பு வாதம் பாரிய பொருளாதார நட்டத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் இனவாதம், மதவாதம் என்பவற்றை பிரயோகித்து படைப் பிரசன்னத்தை உறுதிப்படுத்துவது பொருளாதார மீட்சிக்கு உதவாது. மாறாக வன்முறை அரசியலும், நிலையற்ற அரசியலுமே ஏற்படும்.

**7. இராணுவப் பிரச்சினைகள்**

இலங்கை அரசிடம் மிகப் பெரிய தேவையற்ற இராணுவ ஆளணி உள்ளது. ஆனால் அதை இயக்குவதற்குத் தேவையான மொத்தத் தேசிய உற்பத்தி குறைவாகவே உள்ளது. இதனால் சாதாரண தொழிலாளிகள் செய்யும் தொழில்களிற்கும் அதிகாரிகளின் இடத்திற்கும் இராணுவ ஆளணியினைப் பயன்படுத்தும் சூழல் உள்ளது. பொருளாதார நெருக்கடி நிலையில் இராணுவ ஆளணி கட்டுப்படுத்தப் படாவிடில் சமூகத்தில் கட்டம் கட்டமான வன்முறைகள் அதிகமாகும்.

மேலும் சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் அடக்கப்படுவர். இதனை அண்மைக் காலங்களில் எரிபொருள் வழங்கலில் காணலுற்றோம். இராணுவ ஆளணியினை மட்டுப்படுத்த பன்னாட்டு ஆலோசனை இலங்கை அரசுக்கு தேவை.

**8. மனித உரிமைகள் பிரச்சினைகள்**

பொருளாதார நெருக்கடி நிலையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் பல இடங்களில் அவதானிக்கலாம். மருத்துவ வசதி, உணவு வசதி, வதிவிட வசதி உட்பட வாழ்வதற்கான உரிமைகள் பேணப்படல் வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கான வரிசைகளில் கலவரங்கள் உருவாதல், மக்களுக்கு இடையே முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றது. இவற்றின்போது மனித உரிமை மீறல்கள் ஏற்படும் சாத்தியம் பலவாகும்.

அண்மையில் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய போராட்டங்களை அடக்குவதற்கு மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதாரச் சீர்குலைவால் சட்டம், நீதி, மனித உரிமை என்பனவும் சீர்குலைவது இயல்பேயாகும். பொருளாதாரம் தாழ்வடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**9. பூகோள அரசியல் பிரச்சினைகள்**

எரிபொருள் கப்பல் தாமதித்து வரும்போது ஏற்பட்ட குழப்பநிலை அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. இலங்கையில் முதலீடு செய்கின்ற சீனா, இந்தியா, மேற்குலக நாடுகளுக்கு இடையிலான போட்டித்தன்மை இலங்கையின் பொருளாதாரத் தாழ்நிலையில் அதிக முதலீடுகளை எதிர்பார்த்து நாட்டின் சுயாதீனத்தை இழக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்நிலையில் இலங்கை அரசு சீன அரசின் முதலீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததால் இலங்கையின் தமிழர் பகுதிகள் இந்தியாவின் நேரடிக் கண்காணிப்பிற்குள் வருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

தற்போதைய பொருளாதாரப் பேரிடர் இலங்கையில் பன்னாட்டுப் போட்டி நிலையை ஏற்படுத்தாது இருத்தல் அவசியம். அன்றேல் அப்போட்டி நிலையானது இலங்கையில் இனரீதியான பிரிவினையினை நிரந்தரமாக ஏற்படுத்தி விடும். எனவே ஈழத்தமிழர்கள் இலங்கையின் தற்போதைய பொருளாதாரப் பேரிடர் வகைநிலைகளை அறிந்து அறிவார்ந்த நிலையில் செயற்படல் வேண்டும்.

# தலதாமாளிகைக் குண்டுவெடிப்பும் தர்மலிங்கமும்



**கமலநாதன்**

சேனக குமாரசிங்க என்பவர் காவல்துறைக் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் மூத்த புலனாய்வு அதிகாரியாவார். இரத்தினபுரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இரத்மலானை பகுதியில் வசித்தார். கொழும்பு - இசுப்பத்தானை தெஸ்டன் கல்லூரியில் கல்வி கற்றுப் பின் காவல்துறையில் சேர்ந்தார். தலதாமாளிகை மீதான குண்டுவெடிப்புத் தொடர்பான விசாரணைப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார். தலதாமாளிகைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்று விசாரணைகள் மூலம் அறிந்த தர்மலிங்கம் என்பவரை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த மூதூர் - கட்டைபறிச்சான் பகுதிக்குள் சென்று கைது செய்து மேலதிக விசாரணைகளை நடத்தினார். வெனச யூரியூப் தளத்துக்கு அவர் வழங்கிய செவ்வி பின்வருமாறு.

இரத்தினபுரியில் பிறந்த நான் 5ஆம் வகுப்புவரை அங்கு கல்வி கற்ற பின்னர் இரத்மலானை பகுதியில் வசித்தேன். கொழும்பு - தெஸ்டன் கல்லூரியில் உயர்தரம்வரை கற்றேன். அந்தக் கல்லூரியின் ரகர் விளையாட்டுக் குழுவில் விளையாடினேன். அந்தக் கல்லூரியில் கல்வி கற்பவர்கள் பெரும்பாலும் இலங்கைப் படை மற்றும் காவல்துறையில் உயர் அதிகாரிகளாகப் பதவி வகித்தார்கள். எனது பாடசாலைக் காலத்திலேயே காவல் துறையில் இணைய ஆசைப்பட்டேன். 1979 ஒக்ரோபர் மாதத்தில் காவல் துறையில் சேர்ந்தேன். பயிற்சியின் பின்னர் சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவின் புலனாய்வு அதிகாரியாகக் கொழும்பில் கடமையாற்றினேன்.

**தலதாமாளிகைத் தாக்குதல்**

1998 தை 25ஆம் திகதியன்று காலை 6.02 மணிக்கு தலதாமாளிகை மீது புலிகள் லொறிக் குண்டு ஒன்றை வெடிக்க வைத்தார்கள். இது தொடர்பில் சிறப்பு விசாரணைப் பிரிவில் 2 குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றின் தலைவராக நான் நியமிக்கப்பட்டேன். எமது அணி உடனடியாகக் கண்டிக்குச் சென்று விசாரணைகளைத் தொடங்கியது. குண்டுவெடிப்பின் பின்னர் அங்கு கிடைத்த தடயங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்தோம். அது உடனடியாக முடிக்கக்கூடிய காரியமாக இருக்கவில்லை. நான்கு சடலங்

கள், காயப்பட்ட சிலரை அங்கிருந்து மருத்துவமனைக்கு அனுப்பியிருந்தார்கள். அதுபற்றியும் தேடிப்போனோம். குண்டுவெடித்த பகுதி முழுதும் தேடுதலைத் தொடங்கினோம். சம்பவம் நடந்த இடத்தில்தான் அதற்கான தடயங்களைத் தேட முடியும் என்பது எனக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளில் கற்பிக்கப்பட்டது. நான் அமெரிக்காவின் எவ்.பி.ஐ. உளவு நிறுவனத்திலும் சிறப்புப் பயிற்சி பெற்றிருந்தேன்.

**வாகனத்தைப் பொருத்திப் பார்த்தோம்.**

குண்டுவெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தின் சிதைந்த பாகங்களை ஒன்றுசேர்த்துக் கண்டிக் காவல்துறையினரின் உதவியுடன் அதே ரா இசுஸ் எல்வ் வாகனம் ஒன்றைக் கொண்டுவந்து சிதைந்த நிலையில் கண்டெடுத்த சிதைவுகளை வைத்து அவை அந்த வாகனத்தின் எந்தப் பாகம் என அடையாளம் கண்டோம். செசி வளைந்த நிலையில் அதன் இலக்கத்தைத் தேட முடியாதபடி சிதைந்திருந்தது. அதன்பின் ரயர் ஒன்று எரிந்த குறையாகக் கிடைத்தது. அதிலிருந்த தடயங்களை வைத்துக் கண்டியில் இருந்த ரயர்க் கடைகளில் ஆய்வு செய்தபோது அந்த ரயரில் மஞ்சள் நிற ஸ்ரிக்கர் மற்றும் சில இலக்கங்களைக் கண்டுபிடித்தார்கள். அதன்பின் அவர்கள் கூறினார்கள் இந்த ரயர் றீ - பில் (மீள்நிரப்பு) செய்யப்பட்டது என்று. அதன்போதுதான் குறித்த இலக்கமும் மஞ்சள் நிற ஸ்ரிக்கரும் இடப்பட்டது என்று. ரயர் றீ - பிள் செய்யப்படும் இடங்களைத் தேடினோம். அந்த ரயர் நிக்கவரெட்டியாவில் உள்ள ஓரிடத்தில் றீ-பிள் செய்யப்பட்டது. இரண்டு ரயர்களைக் குறிப்பிட்ட வாகனக்காரர் ஒருவர் ஒப்படைத்தார் என்றும் அறிய முடிந்தது.

அந்தக் கடையில் அந்த வாகனத்தின் இலக்கம் கிடைத்ததால் கொழும்பு மோட்டார் வாகனத் திணைக்களத்தில் அந்த வாகனம் தொடர்பான தகவலைப் பெற்றோம். அது ஏழாவது உரிமையாளரான திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்கு நிக்கவரெட்டியாவிலிருந்து விற்கப்பட்டுள்ளது.

**காவல்துறையில் பதிவு**

கண்டி நகருக்குள் சகல வாகனங்களையும் பதிவு செய்த பின்பே காவல்துறையினர் அனுமதிக்கின்றனர். அந்தப் பதிவில் தர்மலிங்கம், ரவீந்திரன் ஆகியோர் அந்த வாகனத்தைக் கண்டிக்குள் கொண்டு சென்று இந்து கலாசார மண்டபத்தில் நிறுத்தி வைத்தனர் என்று தெரியவந்தது.

அந்த வாகனத்தில் வந்த ரவிச்சந்திரன் என்ற உட பேராதனியைச் சேர்ந்த நபரைக் கைது செய்தோம். திருகோணமலை - கண்டி என எல்லாச் சோதனைச் சாவடிகளிலும் அந்த லொறி வந்துபோனதற்கான பதிவுகளைப் பெற முடிந்தது. ரவிச்சந்திரனுக்குத் திருகோணமலையில் சொந்தக்காரர்கள் இருந்தனர். அவருடன் வந்தவருக்கு ஒரு கையில் பெருவிரல் நீளமாக இருந்தது என்று அறியமுடிந்தது. அவர் திருகோணமலை – நீர்ப்பாசனத் திணைக்களத்தின் விடுதியில் இருந்தார் என்பதை அறிந்தோம். அவரின் சகோதரன் குஞ்சன் என்பவர் புலிகள் இயக்கத்தில் இருந்தார். இந்த விடயங்களை அறிந்துகொள்வதற்குத் திருகோணமலைப் புலனாய்வுக் காவல்துறையினரான பயதுல்லா, கப்டன் நிலாம் ஆகியோர் உதவினார்கள். நிலாமின் உதவியாளர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போய் வருபவர்கள். இதுவிடயத்தில் திருகோணமலைக் காவல்துறையில் எச்.குவை (கெட் குவாட்;டர்ஸ்) ஆகவிருந்த மகேந்திரனும் உதவினார். நிலாம் சேகரித்த தகவலின் படி உயர்ந்த தோற்றமுடைய ஒருவரும் இரண்டு பெண்களும் மூதூர்ப் பாலத்தினூடாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கட்டை பறிச்சானுக்குச் சென்றிருப்பது தெரியவந்தது.

**கிடைத்த தகவல்களை அடிப்படையாக வைத்துப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போக முடியும் என்று நிலாம் கூறினார். அது சுலபமான விடயமாக எனக்குப் படவில்லை. சிலவேளை நாம் எதிர்பார்த்தபடி நடக்காவிட்டால் அங்கிருந்து உயிருடன் திரும்ப முடியாது என்று எனக்குத் தெரியும்**

**புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றோம்**

கிடைத்த தகவல்களை அடிப்படையாக வைத்துப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போக முடியும் என்று நிலாம் கூறினார். அது சுலபமான விடயமாக எனக்குப் படவில்லை. சிலவேளை நாம் எதிர்பார்த்தபடி நடக்காவிட்டால் அங்கிருந்து உயிருடன் திரும்ப முடியாது என்று எனக்குத் தெரியும். புலனாய்வுப் பிரிவில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என 3 இனத்தவர்களும் இணைந்து ஒற்றுமையாகச் செயற்பட்டோம். நிலாம் கட்டைபறிச்சானுக்கு இரகசியமாகச் செல்வதற்கான பாதையை எமக்கு விளக்கினார். அதுபற்றி ஆய்வு செய்தோம். இது விடயமாகத் திருகோணமலைப் படைப் பிரிவுப் பிரிகேட்டுக்கும் தெரியப்படுத்தினேன். அவர்கள் இந்த நடவடிக்கையை அவ்வளவு ஆரோக்கியமானதாக எடுத்துக் கொள்ளவில்லை. எமது இந்த முன்னெடுப்புக்கு முன்னர் மூதூர்ப் பாலத்தடியில் வைத்து மேஜர் அஷாட்டின் அணி மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் அவர்கள் கொல்லப்பட்டனர். ஆனாலும் எப்படியாவது அந்த இடத்துக்குப் போயாகவேண்டும் என்ற மனநிலையே எனக்கிருந்தது.

(தொடரும்)

73




தர்மராசா

# சிறைக்குள்...

## பிரமுகர்களால் ஏமாற்றப்படும் கைதிகள்

மட்டக்களப்புச் சிறைக்குள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியபோது மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் காலை 9 மணியளவில் சிறைச்சாலைக்குள் வந்தார். எமது கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார். அங்கு அவர் பேசும்போது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி நான் தனிப்பட்ட முறையில் முக்கிய தலைவர்களுடன் பேசியிருக்கிறேன். நான் உங்களை மறந்துவிட்டேன் என்று நினைக்க வேண்டாம். உங்களில் ஒருவரும் உங்களின் சொந்தப் பிரச்சினைக்காகச் சிறையில் இருக்கவில்லை, இனிவரும் சூழல் உங்கள் விடுதலையைத் துரிதப்படுத்தும் என நம்புகிறேன். வரும் சித்திரைப் புதுவருடத்துக்கு முன்னர் உங்களில் பெரும்பாலானோர் விடுவிக்கப்பட்டு விடுவீர்கள். விரைவில் பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினர் சிலர் மட்டக்களப்புச் சிறைக்கு வரவிருக்கிறார்கள். அவர்களை 10 நிமிடமாவது உங்களுடன் உரையாட ஏற்பாடு செய்கிறேன். அவர்களிடம் கையளிக்க ஒரு மனுவைத் தயாரித்துத் தருகிறேன். அதில் நீங்கள் கையெழுத்திட்டு அவர்களிடம் கையளிக்கலாம் - என்றார். எமக்குக் கைகுலுக்கிவிட்டுப் போனவர்தான் அதன் பின் எதுவும் நடக்கவில்லை. எனினும் அவர் எம்மைச் சந்தித்த ஒரு மணி நேரத்துக்குள் தனியார் வானொலிச் செய்திகளில் அவரது மட்;டக்களப்புச் சிறை வருகை பற்றியும் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது பற்றியும் செய்திகள் வெளியிடப்பட்டன. அவரது வருகை மூலம் அது ஒன்றுதான் எமக்குத் தேறியது.

அன்று மாலை மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைக் குழுத் தலைவர் எம்மை வந்து சந்தித்தார். எமது பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். கொழும்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெறாதவர்களின் பெயர், அவர்கள் எப்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள் ஆகிய விவரங்களைப் பெற்றுக்கொண்டார். ஒரு வாரத்துக்குள் மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்கைத் தான் நேரடியாகக் கொழும்பு சென்று கவனிப்பார் என்று உறுதியளித்தார். மருத்துவ அறிக்கைக்



# பனாட்டு



இப்போது பனாட்டுக் காலம். பனைகள் பரவியிருக்கின்ற இடங்களிலுள்ள பலரும் பனாட்டு ஊற்றத் தொடங்கியிருப்பார்கள். பனம் பழச் சாற்றைப் பிளிந்தெடுத்து அதை உலர வைத்துப் பெறப்படுவதே பனாட்டு. பழச் சாற்றை இயற்கை முறையில் பதப்படுத்தி வைத்துப் பெறும் உணவு என்றும் பனாட்டைச் சொல்லலாம். பசளையோ, உரங்களோ, எவ்வித செயற்கையோ சேராத பனை மூலம் கிடைக்கின்ற பனாட்டால் உடலுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் ஏராளம். அதிலுள்ள ஊட்டங்களும் அதிகம். அத்தகைய பனாட்டைப் பழங்கஞ்சியுடன் சுவைக்கும்போது ருசி தூக்கலாக இருக்கும். ஆகவே இந்த வாரம் பனாட்டை எவ்வாறு தயாரிப்பது என்று பார்ப்போம்.



சமையல்
சமையல்

**தேவையான பொருள்கள்**

பனம்பழங்கள் 5, பனை ஓலைப் பாய் 1, வெள்ளைத் துணி 1 மீற்றர், பெரிய தாச்சி ஒன்று - ஆகிய பொருள்கள் மாத்திரம் போதுமானவை.

**எவ்வாறு தயாரிப்பது...?**

பனம் பழங்கள் நல்ல நிலையில் இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். பனையிலிருந்து நிலத்தில் வீழ்ந்து இரண்டு நாள்களுக்கு மேற்பட்டிருந்தால் அவற்றுக்குள் வண்டுகள் புகுந்திருக்கும். அத்தோடு அவை புளித்து வாசனை வரும். அவ்வாறில்லாத பனம் பழங்களைத் தெரிந்தெடுத்துச் சுத்தப்படுத்திவிட்டு அவற்றின் தேலை உரித்து விதைகளைப் பாத்திரம் ஒன்றுக்குள் போடவேண்டும். பின்னர் மற்றொரு பாத்திரத்துக்குள் ஒவ்வொரு விதையாக எடுத்து அரை டம்ளர் நீர் சேர்த்து விதையிலுள்ள களியைக் கைகளால் பிளிந்து - பிசைந்து எடுக்கவேண்டும். தொடர்ந்து மற்றைய விதைகளையும் பிளிந்த பின்னர். களியைக் கொஞ்சம் கொஞ்சமாக வெள்ளைத் துணிக்குள் ஊற்றி தும்புகள் தனியாகுமாறு முறுக்கிப் பிளிந்துகொள்ளவேண்டும். பின்னர் அதைத் தாச்சியில் ஊற்றிக் அடுப்பில் வைத்துக் காய்ச்சிக்கொள்ளவேண்டும். காய்ச்சிய களியைப் பாயில் ஊற்றி 2 அல்லது 3 நாள்கள் வரை வெயிலில் உலர வைக்கவேண்டும். குறைந்தது 3 தடவைகள் இவ்வாறு களியைப் பாயில் ஊற்றிப் பனாட்டைத் தடிப்பானதாக ஆக்கலாம். நன்கு உலர்ந்ததும் பனாட்டைப் பட்டைபோல உரித்துப் பத்திரப்படுத்தி வைத்துச் சுவைக்கலாம்...!

காகக் காத்திருந்தவர்களில் நானும் ஒருவன். அதில் எவருக்குமே மருத்துவ அறிக்கை கிடைக்கவில்லை.

கைதிகளைச் சந்திக்க வருவோர் எந்த வித தயார்ப்படுத்தலுடனும் சிறைக்கு வருவதில்லை. கைதிகள் கூறும் பிரச்சினைகளைக் கேட்டுவிட்டு அவர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய பதில் ஒன்றை மட்டும் கூறுவர்.

11.02.2001 அன்று களுத்துறைச் சிறையில் இருந்து மட்டக்களப்புச் சிறைக்கு ஸ்கொட் ஒன்று வந்தது. அதில் பூசா நண்பர்கள் சிலர் அடங்கியிருந்தார்கள். அதில் சேரனும் வந்தார். அவர் ஒரு விடயத்தை எனக்குக் கூறினார். மென்சன், செல்வம் என்ற இரண்டு கைதிகள் 5 வருடங்களாகச் சிறையில் இருக்கிறார்கள். குருநகரைச் சேர்ந்த அவர்கள் மச்சான் முறையானவர்கள். 1.2.2002 தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 10ஆம் திகதி சேரன் அங்கிருந்து களுத்துறைக்குப் புறப்படும் போது அவர்கள் இருவரும் குருதியாக வாந்தி எடுக்கத் தொடங்கினர் என்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்கா விட்டால் இறந்துபோய்விடுவார்கள் என்றும் சேரன் சொன்னார். சொல்லிவிட்டுச் சிறைச்சாலையின் மேல்மாடிக்குப் போய் விட்டார்.

செல்வம், மென்சன் ஆகிய இருவருக்கும் திருமணமாகிப் பிள்ளைகளும் இருந்தார்கள். குருதியாக வாந்தி எடுக்கும் ஆபத்தான செய்தியை வெளிக்கொணர என்ன செய்யலாம் என்று சிந்தித்துக்கொண்டிருந்தபோது அன்றிரவு பி.பி.சி. தமிழ்ச் செய்தியில் இது பற்றிக் கூறினார்கள். அந்தச் செய்தி பற்றிச் சேரனிடம் மறுநாள் காலையில் கூறினேன். தாம் ஸ்கொட் வரும்போது வெலிக்கந்தையில் சிறைச்சாலைப் பேருந்து நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் முஸ்லிம் குடும்பம் ஒன்று வான் ஒன்றில் வந்திருந்தது என்றும் அவர்களிடம் மென்சன், செல்வம் ஆகியோரின் நிலவரத்தை முடிந்தால் ஊடகங்களுக்கு அறிவிக்குமாறு சிறிய கடதாசித் துண்டில் எழுதிச் சிறைச்சாலை ஊழியர்களின் கண்ணில் படாமல் அவர்களின் வான் இருக்கையில் எறிந்தோம் என்றும் சேரன் சொன்னார். அவ்வாறு எறிந்தபோது வானுக்குள்ளே இருந்த ஒருவர் அந்தக் கடதாசித் துண்டின்மேல் தனது கைக்குட்டையைப் போட்டு மறைத்து யாருக்கும் தெரியாமல் அதை எடுத்தார். அவர்களால் அனுப்பபட்ட செய்திதான் வெளியிடப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்.

(தொடரும்)

# கோர்பசெவ்: வரலாற்றில் ஓர் அவல நாயகர்

எஸ்.வி.ஆர்.துரை



மிகெய்ல் கோர்பசெவ் இறந்துவிட்டார். அவர் உயிரோடு இருந்தபோது அமெரிக்காவிலும் மேற்கு நாடுகளிலும் ஜப்பானிலும் அவரைப் புகழ்ந்து வந்தவர்களில் பெரும்பாலோர் இப்போது இரங்கல் தெரிவித்தனர். அவரது தாய் மண்ணான ரஷ்யாவிலோ ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த புதின் மட்டுமல்லாது, பழைய சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் இரங்கத்தக்க எச்சமாகவும் புதினின் ரஷிய பெருந்தேசியவாதத்தை ஆதரித்துவரும் இயக்கமாகவும் உள்ள ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியினரும் பெரும்பாலான சாமானிய மக்களும்கூட சோவியத் ஒன்றியம் தகர்ந்துவிடுவதற்கான முழுப் பழியையும் இப்போதும் கூட அவர் மீதே சுமத்துகின்றனர். அதேபோலத்தான் உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் பெரும்பாலானவையும் கூறுகின்றன.

கோர்பசெவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரானவுடன் தொடங்கிய - பெரெஸ்த்ரொய்கா (பொருளாதாரம், அரசியல் சீர்திருத்தங்கள்) , - கிளாஸ்னோஸ்ட் (வெளிப்படைத் தன்மை) ஆகியவை சோவியத் ஒன்றியத்தில் இருந்த அதிகாரி வர்க்க சோசலிஸத்திற்கு மாற்றான ஜனநாயகத்தன்மை கொண்ட, மக்களின் விமர்சனங்களுக்கு செவிமடுக்கின்ற, ஒரு புதிய சோசலிஸ சோவியத் ஒன்றியத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையை உலகெங்குமுள்ள பல்லாயிரக்கணக்கான சோசலிஸ ஆதரவாளர்களிடையே உருவாக்கியிருந்தது. -கிளாஸ்நோஸ்ட், கருத்துச் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்து, அரசின் கடந்த கால, நிகழ்காலக் குற்றங்களையும் தவறுகளையும் வெளிப்படையாக விவாதிப்பதற்கும் பேசுவதற்கும், கிளாஸ்நோஸ்டை எதிர்த்தவர்களின் கருத்துகளுக்கும்கூட வாயப்பளித்தது. கடந்த காலத்தில் பொய்க் குற்றச்சாட்டுகளின்பேரில் - கங்காரு கோர்ட் - முறையில் தண்டிக்கப்பட்ட போல்ஷ்விக்குகள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், படைத் தளபதிகள், சிறுபான்மை இனக் குழுவினர் ஆகியோருக்கு அங்கீகாரமும்



மறுவாழ்வும் தரப்பட்டன.

ஆஃப்கானிஸ்தானில் தலையிட்டதன் மூலம் எந்த சோவியத் படைத்துறை பாசிஸத்தை முறியடிப்பதில் புகழ் பெற்றிருந்ததோ அதே சோவியத் படை, பேரிழப்புகளையும் அவமானத்தையும் சம்பாதித்திருந்த நிலையில் அந்த படைகளை கோர்பசெவ் திரும்ப அழைத் துக்கொண்டது மக்களால் வரவேற்கப்பட்டது. அதே போல, அணு ஆயுதங்களால் ஏற்படக் கூடிய அபாயங்களை உணர்ந்து அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களை அமெரிக்காவுடன் அவர் செய்துகொண்டதும் உலக சமாதானத்தை விரும்பியவர்களாலும் அந்த படைத் தலையீட்டினால் சோவியத் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பேரிழப்புகளை ஓரளவேனும் ஈடு செய்துவிடவேண்டும் என்று விரும்பிய சோவியத் மக்களாலும் வரவேற்கப்பட்டது. சோவியத் ஒன்றியத்தில் கட்சிக்கோ, ஆட்சிக்கோ கட்டுப்படாத வகையில் சுயாதீனமுள்ள நீதித் துறையை உருவாக்கிய பெருமையும் அவருக்கு இருந்தது. சோவியத் ஒன்றியத்திற்கும் சீனாவுக்கும் இருந்துவந்த பல்லாண்டு காலப் பகைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து சீனாவுடன் நல்லுறவை உருவாக்கினார் கோர்பசெவ்.

கோர்பசெவின் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திய சில குழப்பங்களைப் பயன்படுத்தி பால்டிக் நாடுகளான ஆர்மீனியா, ஜோர்ஜியா ஆகியன பிரிந்து செல்ல முடிவெடுத்தன. அங்குள்ள சுரண்டும் சக்திகளுக்கு அந்தந்த நாட்டு தேசியவாதம் மட்டுமின்றி நீண்ட காலம் நீடித்திருந்த வெள்ளை ரஷ்யர்களின் ஆதிக்கமும் காரணமாக இருந்தன. ஆனால், லித்துவேனியாவில் சோவியத் படை நுழைந்து வலுக்கட்டாயமாகப் பிரிவினைச் சக்திகளை சோவியத் படையின் மூலம் ஒடுக்குவதை கோர்பசெவ் விரும்பவில்லை. அதேபோல, அஜெர்பய்ஜானிலும் ஆர்மீனியாவிலும் இருந்த தேசிய வெறிக் கும்பல்களால் அந்த நாடுகளின் சாமனிய மக்கள் தேசியவாதத்தின் பெயரால் கொல்லப்படுவதைப் பெருமளவில் கட்டுப்படுத்தினார் கோர்பசெவ். மேலும் கிழக்கு ஜெர்மனி, ருமேனியா, போலந்து முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்த 'சோசலிஸ ஆட்சிகள்' மீது வெறுப்படைந்திருந்த அந்த நாடுகளின் மக்கள் அந்த அரசுகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது, அதில் சோவியத் ஒன்றியம் தலையிடுவதைத் தவிர்த்துடன், கிளர்ச்சி செய்யும் தங்கள் சொந்த நாட்டு மக்கள் மீது ஒடுக்குமுறையை ஏவக்கூடாது என்று அந்த நாடு அரசுகளுக்கு அறிவுரையும் வழங்கினார்.

அமெரிக்கா மையத்தில் இருந்த - நேட்டோ - அமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட - வார்ஸா ஒப்பந்தத்தையும் - ப்ரெஸ்னெவ் கொள்கை' என்று சொல்லப்பட்ட சோவியத் பாணியை ஏற்க மறுத்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் படைத் தலையீடு செய்வதற்கு சோவியத் ஒன்றியத்துக்கு இருந்த அதிகாரத்தையும் உரிமையையும் நீக்கினார். இந்த அதிகாரத்தைக் கொண்டுதான் சோவியத் முன்மாதிரிக்கு மாற்றாக செக்கோஸ்லோகிய அரசு உருவாக்கத் தொடங்கிய புதிய சோசலிஸ முன்மாதிரியை சோவியத் ஒன்றியம் 1968இல் நசுக்கி ஒழித்தது.

**சறுக்கல்கள்**

பொருளாதாரத் துறையில் 'பெரெஸ்த்ரொய்கா' தொடக்கக் காலத்தில் சில ஆதாயங்களை மக்களுக்கு ஈட்டித் தந்தது என்றாலும், எண்ணெய், இயற்கை வாயு ஆகியவற்றின் உலக விலை திடீரென சரிந்ததால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அந்த வெற்றிகளை மங்கச் செய்தது.

சோவியத் ஒன்றியத்தில் - நாமன்கிளேச்சுரா - என்றழைக்கப்பட்டுவந்த அதிகாரி வர்க்கத்தினர் பல்வேறு துறைகளில் அனுபவித்துவந்த ஆதிக்கத்தை அகற்ற கோர்பசெவ் முயற்சி செய்தபோதிலும் நாட்டில் நிலவிவந்த ஆழமான பொருளாதார நெருக்கடியை அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. காலஞ்சென்ற மார்க்ஸிய அறிஞர் எரிக் ஹாப்ஸ்பாம் கூறியதுபோல, "சோவியத் ஒன்றியத்தில் இருந்த பொருளாதார நெருக்கடியைக் கடந்து வருவதற்கான வாய்ப்புகள் ஸ்டாலின் இறந்ததற்குப் பிந்திய முதல் சில ஆண்டுகளில் மட்டுமே இருந்தன." ஆனால், சோவியத் அதிகாரி வர்க்கம் தான் அனுபவித்து வந்த சலுகைகளையும் அதிகாரத்தையும் சிறிதும் விட்டுக்கொடுக்காததால், அந்த வாய்ப்புக் கை நழுவிப்போயிற்று.

உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து சோவியத் நாடாளுமன்றத் தேர்தல் வரை ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே போட்டியிடும் நிலைமையை மாற்றி கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுடன் வேறு கட்சியினரும் போட்டியிடலாம் என்ற முறையை கோர்பசெவ் கொண்டுவந்தது ஜனநாயகச் செயல்பாடு என்றாலும், அது அப்பட்டமான நவதாராளவாத முதலாளியத்தைக் கொண்டுவர முடிவு செய்திருந்த யெல்ட்சில்ன் போன்றவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வழியைத் திறந்துவிட்டது.

கோர்பசெவின் சீர்திருத்தங்களின் காரணமாக மனித முகம் கொண்ட சோசலிஸத்தைக் கட்டும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்ட பல மார்க்ஸிய சிந்தனையாளர்கள் உருவாகினர். ஆனால் கட்சியிலோ ஆட்சியிலோ எவ்விதச் செல்வாக்கும் இல்லாதிருந்த அவர்களால் மக்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

ஒருபக்கம் யெல்ட்ஸின் போன்ற அப்பட்டமான முதலாளிய ஆதரவாளர்களுக்கும் மறுபக்கம், சோவியத் ஒன்றியத்தில் உருவான அரசியல், பொருளாதார, நிர்வாகக் கட்டமைப்புகளை போல்ஷ்விஸத்தின் பெயரால் அப்படியே கட்டிக் காக்க வேண்டும் என்று விரும்பிய அதிகாரி வர்க்க சக்திகளுக்குமிடையே மாட்டிக்கொண்டு தவித்த கோர்பசெவைக் கைவிட்டு விலகினார் கம்யூனிஸ்ட் கட்சியில் செல்வாக்கு மிகுந்தவரும் பெர்ரெஸ்ட்ரொய்காவின் முதல் கட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதில் கோர்பசெவுக்கு துணையாக நின்றவருமான

லிகாசெவ். அது பெரெஸ்ட்ரொகாவின் இரண்டாவது கட்டம் சோசலிஸ குறிக்கோள்களிலிருந்து விலகத் தொடங்கியதற்கான தொடக்கமாக அமைந்தது.

**துரோகங்கள்**

இப்படிப்பட்ட சூழலில் கோர்பசெவ் மேற்கு ஐரோப்பிய சோசலிஸ ஜனநாயகவாதிகளைப் பின்பற்றி, மேலிருந்து கட்டுப்படுத்தப்படும், அதிகாரி வர்க்க பொருளாதாரத்துக்கு மாற்றாக முதலாளிய அம்சங்கள் கொண்ட ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கினார். அதன் பொருட்டு அவரும் அவரது ஆதரவாளர்களும் அமெரிக்காவின் உதவியையும் உலக வங்கி, சர்வதேச நிதியம் ஆகியவற்றையும் அணுகும் நிலைக்குச் சென்றுவிட்டனர்.

கோர்பசெவ் என்னதான் உலக சமாதானக் கொடியை ஆட்டிவந்த போதிலும் அமெரிக்காவோ, பிற நேட்டோ நாடுகளோ தங்கள் படைக் கூட்டமைப்புகளைக் கலைக்க முன்வரவில்லை. நேட்டோ அமைப்பு கிழக்கு ஐரோப்பா நோக்கி விரிவடையாது என்ற வாக்குறுதியை கோர்பசெவ் அன்றைய அமெரிக்க அதிபரிடமிருந்து பெற்றது உண்மைதானென்றாலும், அப்படிப்பட்ட வாக்குறுதி ஏதும் தரப்படவில்லை என்ற பச்சைப் பொய்யை அமெரிக்க ஆட்சியாளர்களும் ஊடகங்களும் இன்று அவிழ்த்துவிட்டுக்கொண்டிருக்கின்றன.

மறுபுறம், சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்துபோன (இந்தப் பிரிவினையை ஊக்குவித்தவர் யெல்ட்சின்) குடியரசுகள் நீங்கலாக சோவியத் ஒன்றியத்தில் இருந்த மற்ற எட்டுக் குடியரசுகளில் பொது வாக்கெடுப்பு நடத்தி மிகப் பெரும்பான்மையான மக்கள் புதிய வடிவத்தில் சோவியத் ஒன்றியம் நிலவுவதற்கு வாக்களிப்பு செய்ய வைத்தார் கோர்பசெவ். ரஷிய குடியரசின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யெல்ட்சினாலும்கூட அந்த வாக்கெடுப்பைத் தடுக்க முடியவில்லை.

அந்த வாக்கெடுப்பு 1991 பங்குனி மாதம் நடந்தது. அந்த எட்டுக் குடியரசுத் தலைவர்களும் அந்த வாக்கெடுப்பைப் பின்பற்றி சில புதிய நிபந்தனைகளுடன் இறையாண்மை பெற்ற சோவியத் குடியரசுகளின் ஒன்றியம் என்ற புதிய அமைப்பை உருவாக்க அதே ஆண்டு ஆவணி மாதம் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடிவுசெய்திருந்தனர்.

ஆனால், அதற்குள் இரு நிகழ்ச்சிகள் நடந்தன. சோவியத் ஒன்றியத்தின் பழைய கட்டமைப்பு அதிகாரம், நிர்வாகம் முதலியவற்றை போல்ஷ்விசத்தின் பெயரால் தக்க வைத்துக் கொள்ள முடிவு செய்த பழைமைவாத அதிகாரி வர்க்கத்தினர் (படைத் தளபதிகள், உளவுத் துறையினர், ஆட்சித் துறையினர்), அப்போது கிரிமியாவில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த கோர்பசெவை வீட்டுக் காவலில் வைத்துவிட்டு நெருக்கடிநிலையைப் பிரகடனப்படுத்தி ரஷ்ய நாடாளுமன்றத்தைக் கைப்பற்றவும் யெல்ட்சினைக் கைதுசெய்யவும் ஒரு படைப் புரட்சித் திட்டத்தைத் தீட்டினர். சோவியத் ஒன்றியம் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த லட்சக்கணக்கான உறுப்பினர்களையோ, கோடிக்கணக்கான பொது மக்களையோ திரட்டாமல் நடந்த அந்த படைத்துறைப் புரட்சி இரண்டே இரண்டு நாட்கள் மட்டுமே நீடித்தது.

ரஷ்ய நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கிச் சென்ற ஒரு படை டாங்கியின் மீது ஏறி நின்று அந்த படைத்துறைப் புரட்சியை எதிர்த்து முழங்கிய யெல்ட்ஸின் பெரும் வீரராக ரஷ்ய மக்களால் பார்க்கப்பட்டார். சோவியத் படைகளின் மிகப் பெரும் பகுதி அந்த படைப் புரட்சியாளர்களுடன் ஒத்துழைக்க மறுத்தது. கைதுசெய்யப்பட்ட அவர்கள் விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டனர்.

இது ஒருபுறமிருக்க எட்டுக் குடியரசுகள் சேர்ந்த புதிய ஒன்றியம் ஏற்படுவதைத் தடுக்க யெல்ட்சின் சந்தர்ப்பவாத உக்ரெய்ன், பைலோரஷியா குடியரசுத் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்து சுதந்திர அரசுகளின் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கி சோவியத் ஒன்றியம் சரிந்து விழுவதற்குக் கால்கோள் இட்டார். எந்த ஆதரவும் அதிகாரமும் இல்லாமல் போன கோர்பசெவ் சோவியத் நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டத்தில் ஒன்றியத்தைக் கலைத்துவிடுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியவரானார்.

இதேவேளை, சோசலிஸ நாட்டை உருவாக்க எத்தனையோ இன்னல்களையும் தியாகங்களையும் செய்த அந்த நாட்டு உழைக்கும் மக்கள் உருவாக்கிய செல்வங்களைக் கொள்ளையடிக்கவும் தொடங்கினர், யெல்ட்சினும் அவரது தீவிர ஆதரவாளர்களிலொருவருமான புதின் போன்றவர்களும்.

அரசியல் செல்வாக்கு அனைத்தையும் இழந்திருந்த, சோவியத் பொருளாதாரம் சந்திந்திருந்த நெருக்கடிக்கு சந்தைப் பொருளாதாரத்தில் தீர்வு தேடிய கோர்பசெவுக்கு அந்தக் கொள்ளையடிப்புகளைத் தடுத்து நிறுத்தும் சக்தி சிறிதும் இருக்கவில்லை. எனினும், எந்த லட்சியத்தை முன்னிட்டும் சோவியத் ஒன்றியத்தில் உள்நாட்டுப் போருக்கான சாத்தியப்பாடும் குருதிச் சகதியும் நிகழ்வதற்குத் தான் எவ்வகையிலும் பொறுப்பானவராக இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் அவர். யெல்ட்சினின் தலைமையிலிருந்த தீவிர வலதுசாரி முதலாளியப் பாதையாளர்கள், படைப் புரட்சியை நடத்தித் தோல்வியடைந்தவர்கள் ஆகியோரும் சேர்ந்துதான் சோவியத் ஒன்றியத்தின் தகர்வை உத்தரவாதப்படுத்தினர்.

சோவியத் ஒன்றியத்தை எட்டுக் குடியரசுகள் மட்டுமே கொண்ட புதிய ஒன்றியமாக மாற்றும் கோர்பசெவ் திட்டம் நிறைவேறியிருந்தால் அந்த ஒன்றியம் அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் இன்று உக்ரெய்ன் மூலம் ரஷ்யாவுக்கு எதிராக நடத்தி வரும் மாற்றாள் போருக்கு (proxy war) வாய்ப்பிருந்திருக்காது.


**கம்யூனிஸ்ட்டுகளுக்கான கேள்வி**

சோவியத் ஒன்றியத்தின் சோசலிஸ முயற்சிகள் தோல்வியடைந்தற்கும் அந்த மாபெரும் நாடு சிதறுண்டு போனதற்குமான அரசியல், பொருளாதார, வரலாற்றுக் காரணங்களை ஆழமாகக் கற்றுணர்வது லெனின் தலைமையில் நடந்த மாபெரும் நவம்பர் புரட்சியின் லட்சியங்களை எதிர்காலத்தில் நிறைவேற்ற விரும்பும் இன்றைய கம்யூனிஸ்ட்டுகள் செய்ய வேண்டிய முக்கிய கடமை. வரலாற்றில் சில தனிமனிதர்கள் முக்கியப் பாத்திரம் வகிக்கின்றனர். ஆனால், அவர்கள் மட்டுமே வரலாற்றை உருவாக்குவதில்லை அதன் திசை மார்க்கத்தைத் தீர்மானிப்பதில்லை என்பதை உணர்வதோடு, சோவியத் ஒன்றியம் இரண்டே இரண்டு நாளில் தகர்ந்து விழுந்தது எவ்வாறு, அந்தத் தகர்வுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் ஏன் ஒரு சிறிய எதிர்ப்புப் போராட்டத்தைக்கூட நடத்தவில்லை என்ற கேள்விகளுக்கும் விடை காண்பது மேலும் முக்கியமானது.

சோவியத் ஒன்றிய தகர்வுடன் வரலாறு முடிந்துவிடவில்லை. முடிந்துவிட்டது என்று கூறிய பிரான்ஸிஸ் ஃபுகயாமாகூட அந்தக் கருத்தை நிராகரித்துவிட்டார். கோர்பசெவ் வரலாற்றில் தோன்றி மறைந்த ஓர் அவல நாயகர்களிலொருவர். அவ்வளவுதான்!

# குடலைக் காப்போம்!

கணேசன்




அவர் ஒரு தனியார் வங்கியின் மேல்நிலை நிர்வாகி. வயது 50 இருக்கும். பணி நிமித்தமாக அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்றுகொண்டிருப்பார். அப்போதெல்லாம் உடல் அசதி வாட்டியது. அதற்கு வேலைப் பளுதான் காரணம் என்று நினைத்துக்கொண்டார். அடுத்து, அவர் மலம் கழிக்கும்போது லேசாகக் குருதி கசிந்தது. பயணத்தால் ஏற்படும் உடல் சூடு என்று அவராகவே முடிவு செய்துகொண்டார். சமயங்களில் இது குறித்து நண்பர்களிடம் சொன்னபோது மூல நோய் இருந்தாலும் அப்படி ரத்தம் வெளியேறும் என்றார்கள்; மருத்துவரைப் பார்த்துக்கொள்வது நல்லது என்றார்கள்.

ஆனாலும் மருத்துவரைப் பார்க்க நேரமில்லாமல் அவருக்குத் தெரிந்த கை வைத்திய முறைகளைக் கையாண்டார். மலத்தில் குருதி வெளியேறுவது மட்டும் குறையவே இல்லை. போகப்போக பசி குறைந்தது. உடல் எடையும் குறையத் தொடங்கியது. அசதி அதிகமானது. வேலையே செய்ய முடியவில்லை.

ஒருமுறை அவர் வங்கி வேலையாக வந்திருந்தபோது என் உள்ளூர் நண்பரின் துணையுடன் என்னிடம் வந்தார். எளிய மலக்குடல் பரிசோதனையிலேயே அவருடைய பிரச்சினை எனக்குப் புரிந்துவிட்டது. என்றாலும், குருதிப் பரிசோதனை, சி.டி.ஸ்கேன் பரிசோதனை மற்றும் திசுப் பரிசோதனைகளை மேற்கொண்டு அவருடைய பிரச்சினையை உறுதி செய்தேன்.

ஆம், அவருக்கு மலக்குடலில் புற்றுக்கட்டி மூன்றாம் நிலையில் இருந்தது. அவரை சென்னையில் உள்ள புற்றுநோய் மையத்துக்கு அனுப்பி சிகிச்சை பெறச் செய்தேன். இப்போது அவர் நலமாக இருக்கிறார். ஆனாலும் அவர் புற்றுநோயிலிருந்து மீண்டுவர பல மாதங்கள் சிரமப்பட்டார். காரணம் அவர் செய்த காலதாமதம். மருத்துவரிடம் பரிசோதனைக்கு வரத் தயக்கம் காட்டுவதுதான் இந்தக் காலதாமதத்துக்கு அடிப்படை காரணம். இந்தத் தாமதம்தான் புற்றுநோய் மருத்துவத்தில் சிக்கலை உண்டுபண்ணும்.



வங்கி நிர்வாகி மலத்தில் குருதி கசியத் தொடங்கியதுமே மருத்துவரைப் பார்த்திருந்தால், புற்றுநோயை முதல் நிலையிலேயே கட்டுப்படுத்தி இருக்கலாம்; சிகிச்சையில் சிரமங்கள் இருந்திருக்காது. புற்றுநோய் விஷயத்தில் படித்தவர்களே இப்படித் தவறு செய்யும்போது பாமர மக்களின் நிலைமையைச் சொல்லத் தேவையில்லை. புற்றுநோய் இல்லாத உலகம் படைக்க நோய் குறித்த உண்மையான புரிதலும் தகுந்த விழிப்புணர்வும்தான் மிகவும் முக்கியம்.

**எது குடல் புற்றுநோய்?**

குடல் பலதரப்பட்ட சவ்வு அடுக்குகளால் ஆனது. இங்கு தொடக்கத்தில் சிறிய புண் போல் தோன்றி, தடிப்பு உண்டாகி, கட்டியாக மாறுவதுதான் குடல் புற்றுநோய். தொடக்கத்தில் இதில் வலி எதுவும் இருக்காது என்பதால் அநேகரும் இதை அலட்சியப்படுத்துவது நடைமுறை. நோயானது பல கட்டங்கள் கடந்த பிறகுதான் மருத்துவரிடம் வருவார்கள். ஒரு சிலருக்கு வயதுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் வழக்கமான மாஸ்டர் ஹெல்த் செக்அப்பின்போது குடல் புற்றுநோய் இருப்பது அறியப்படுவது உண்டு.

**என்னென்ன காரணங்கள்?**

குடல் புற்றுநோய் பெரும்பாலும் 50 வயதைக் கடந்த வர்களுக்கு ஏற்படுகிறது. விதிவிலக்காக, APC, K-RAS, DCC, P53 ஆகிய புற்று மரபணுக்கள் காரணமாகக் குடலில் பாலிப் (Polyp) எனப்படும் குடல் விழுதுக் கட்டிகள் இருப்பவர்களுக்கு 40 வயதிலேயே குடல் புற்றுநோய் வருகிறது. அதிலும் முக்கியமாக அடினோமா (Adenoma) எனும் கட்டிகள் இருக்குமானால் இவர்க ளுக்கு அவை புற்றுக்கட்டிகளாக மாறிவிட வாய்ப்புகள் அதிகம். குடலில் அழற்சிப் புண்கள் (Ulcerative colitis) மற்றும் கிரான் குடல் அழற்சி நோய் (Crohn's colitis) தோன்றுபவர்களுக்கு நாளாக ஆக அவை புற்றுக்கட்டி களாக மாற வாய்ப்புண்டு.

குடும்பத்தில் யாருக்காவது குடல் புற்றுநோய் வந்தி ருந்தால் அவர்கள் வாரிசுகளுக்கும் புற்றுநோய் வரும் வாய்ப்பு அதிகரிக்கிறது. புகைபிடிக்கும் வழக்கம் உள்ள வர்களுக்கு இந்தப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு கூடுதலாகிறது. குடி குடியை மட்டுமல்ல, குடலையும் அழிக்கும் என்பதை இன்னும் புரியாதவர்கள் நம்மிடம் அதிகம்.

தமிழக மக்கள் சிறுதானிய உணவுகளுடன் காய்கறி



கனிகள் மிகுந்த பாரம்பரிய உணவுகளைச் சாப்பிட்டு வந்தபோதெல்லாம் குடல் புற்றுநோய் இருந்த இடம் தெரியவில்லை. இன்றைய நாகரிக உலகில் பலதரப்பட்ட செயற்கை நிறமூட்டிகளும் மணமூட்டிகளும் மசாலாக்க ளும் கோதுமையும் கூடிக்குலாவி கும்மியடிக்கும் துரித உணவுப் பழக்கம் மக்கள் மத்தியில் வழக்கமான பிறகுதான் குடல் புற்றுநோயின் தாக்கம் வலுவானது; அதிகமானது. உணவு அறிவியல் உணர்த்தும் உண்மை இது.

**என்னென்ன அறிகுறிகள் தெரியும்?**

நோயின் தொடக்கத்தில் அடிக்கடி மலச்சிக்கல் தோன்றும். இது ஒரு சாதாரண அறிகுறி என்பதால் அதை அலட்சியப்படுத்துவது வழக்கம். பிறகு மலக்கழிச்சல் உண்டாகும். இந்த அறிகுறி குடலில் அழற்சிப் புண்கள் இருந்தாலும் ஏற்படும் என்பதால் இப்போதும் புற்றுநோய் குறித்த புரிதல் ஏற்படாது. அடுத்து மலத்தில் குருதி கசி யும். உடல் அசதியாக இருக்கும். பசிக்காது. எடை குறை யும். குருதிச்சோகை காணப்படும். நீடித்த குருதிச்சோகை புற்றுநோய்க்கு முக்கிய அறிகுறி.

இப்போதாவது விழித்துக்கொள்ள வேண்டும். அவசி யம் மருத்துவரைப் பார்த்து ஆலோசனை பெறவேண்டும். இந்த அறிகுறிகளில் முக்கியமாக மலத்தில் குருதி வருவது, உடல் அசதி உள்ளிட்ட பலவும் மூலநோயிலும் மலவாய் வெடிப்பிலும் பவுத்திரத்திலும் காணப்படும் என்பதால், வந்திருப்பது மூலநோயா, பவுத்திரமா, குடல் புற்றுநோயா என்பதை பரிசோதனைகள் மூலம் உறுதி செய்துகொள்வது நல்லது.

**என்னென்ன பரிசோதனைகள்?**

மருத்துவர் கையுறை அணிந்த விரலால் மலக்குட லைப் பரிசோதித்தாலே மலக்குடலில் உள்ள புற்றுநோய் தெரிந்துவிடும். பிரக்டாஸ்கோப் மற்றும் கொலனாஸ்கோப் வழியாக மலக்குடலை பரிசோதனை செய்யும்போது கீழ்க்குடலில் கட்டிகள் இருப்பது தெரிந்துவிடும். வயிற் றுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், சி.டி.ஸ்கேன், எம். ஆர்.ஐ. ஸ்கேன் ஆகியவற்றை எடுத்துப் பார்த்தால் மேல் குடலில் கட்டிகள் இருப்பது தெரிந்துவிடும். பெட் - சி.டி. ஸ்கேன் (PET - CT Scan) எடுத்துப் பார்த்தால் குடல் புற்றுநோயை மிகவும் தொடக்க காலத்திலேயே தெரிந்துகொள்ள முடியும்.

கட்டி இருப்பது உறுதியானால் திசுப் பரிசோ தனை (Biopsy) மூலம் அது புற்றுக்கட்டியா என்ப தையும் எந்த வகை புற்றுநோய் என்பதையும் தெரிந்துகொள்ள முடியும். மார்பு எக்ஸ்-ரே மற்றும் எலும்பு ஸ்கேன் மூலம் அந்தப் புற்றுநோய் உடலுக்குள் நுரையீரல் மற்றும் பிற இடங்களில் பரவியுள்ளதா என்பதை அறிய முடியும். சிகிச்சை யைத் தொடங்குவதற்கு வழக்கமான குருதிப் பரிசோதனைகளும் தேவைப்படும்.

**குடல் புற்றுநோயைச் சிறை பிடிக்க என்ன வழி?**

குடும்ப வழியில் குடல் புற்றுநோய் வரும் வாய்ப் புள்ளவர்கள் 15 வயதுக்கு மேல் 5 வருடங்களுக்கு ஒருமுறை கொலனாஸ்கோப்பி பரிசோதனையை மேற்கொண்டால் குடல் புற்றுநோயை தொடக்கத் திலேயே கவனித்துவிடலாம். அதுபோல், நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களும் குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டவர்களும் புகை மற்றும் மதுப்பழக்கம் உள்ளவர்களும் ஆண்டுதோறும் கொல னாஸ்கோப்பி பரிசோதனையை மேற்கொண்டால், குடல் புற்றுநோயை தொடக்கத்திலேயே சிறைபிடித்துவிடலாம்.

மேலும் மலத்தில் மறை குருதி (Occult blood test) பரிசோதனை மூலமும் இதை அறியலாம். டியூமர் மார்க்கர் (Tumor marker) எனப்படும் மரபணுப் பரிசோதனைகள் சிலவும் இதற்கு உதவுகின்றன. CEA பரிசோதனை (Carcinoembryonic antigen test) அதில் முக்கியமானது.

**சிகிச்சைகள் என்னென்ன?**

அறுவை சிகிச்சை: தொடக்க நிலையில் உள்ள மலக் குடல் புற்றுநோய்க்கு அறுவை சிகிச்சை மேற்கொள் ளப்படும். கட்டி உள்ள இடத்தைப் பொறுத்து மலப்பை (Colostomy bag) தேவையா, இல்லையா என்பது முடிவு செய்யப்படும். நடைமுறையில் மலப்பையைத் தனியா

கப் பொருத்தப்படுவதுதான் பலருக்கும் பிரச்சினையாகத் தோன்றும். தனியாக மலப்பை தேவையில்லாத வகையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிற நவீன முறைகள் இப்போது வந்துவிட்டன. அறுவை சிகிச்சைக்குப் பிறகு தேவைப்பட்டால் மருந்து சிகிச்சை / கதிர்வீச்சு சிகிச்சை மேற்கொள்ள வேண்டி வரலாம்.

பெருங்குடல் புற்றுநோய்க்கு பூஜ்ஜிய நிலையிலிருந்து 3ஆம் நிலை வரை முதலில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும். அருகில் உள்ள நெறிக்கட்டிகளும் அகற்றப்படும். அதற்குப் பிறகு மருந்து சிகிச்சை / கதிர்வீச்சு சிகிச்சை அளிக்கப்படும். நான்காம் நிலைக்கு மட்டும் முதலில் மருந்துசிகிச்சை அளிக்கப்படும். பிறகு அறுவை சிகிச்சையும் கதிர்வீச்சு சிகிச்சையும் பரிந்துரை செய்யப்படும். பெருங்குடல் புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சையில் மலப்பை பொருத்தப்படுவது தேவைப்படாது.

மருந்து சிகிச்சை: பாதிக்கப்பட்டவரின் பொதுவான உடல்நிலை, வயது மற்றும் நோயின் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மருந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. முக்கியமாக கூட்டு மருந்து சிகிச்சை நல்ல பயன் தருகிறது. பெரும்பாலும் அறுவை சிகிச்சைக்குப் பிறகுதான் மருந்து சிகிச்சை அளிக்கப்படும். விதிவிலக்காக சிலருக்கு இது அறுவை சிகிச்சைக்கு முன்னரும் தேவைப்படலாம்.

டார்கெட் தெரபி (Targeted therapy): புற்றுநோய் செல்களை மட்டும் குறிவைத்து அழிக்கும் மருந்து சிகிச்சைக்கு டார்கெட் தெரபி என்று பெயர். சாதாரண மருந்து சிகிச்சையில் புற்றுசெல்களோடு இயல்பான செல்களும் அழியக்கூடிய வாய்ப்புகள் உண்டு. இந்தப் பிரச்சினை டார்கெட் தெரபியில் இல்லை. புற்றுநோய் மருத்துவத்தில் இப்போது வெகுவாக முன்னேற்றம் காணும் மருத்துவம் இது.

**கதிர்வீச்சு சிகிச்சை:** பெருங்குடல் புற்றுநோய் மருத்துவத்தில் கதிர்வீச்சு சிகிச்சையின் பங்கு குறைவானதுதான். அதேநேரத்தில் மலக்குடல் புற்றுநோய் மருத்துவத்தில் கதிர்வீச்சு சிகிச்சையின் பங்களிப்பு மகத்தானது. லீனாக் அல்லது கோபால்ட் கருவியில் கதிர்வீச்சு தரப்படுகிறது. நாளொன்றுக்கு ஒருமுறை, வாரத்துக்கு 5 நாட்கள் வீதம், 5 வாரத்துக்கு மொத்தம் 25 முறை தரப்படுகிறது.

**தொடர் கண்காணிப்பு தேவை**

குடல் புற்றுநோயைப் பொறுத்தவரை முதன்மை சிகிச்சைகள் முடிந்த பிறகு அடுத்த 3 வருடங்களுக்கு மருத்துவர் கூறும் இடைவெளியில் மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்வதும் தொடர் கவனிப்பும் கண்காணிப்பும் அவசியம். அப் போதுதான் புற்றுநோய் மறுபடியும் தலைக்காமல் பார்த்துக்கொள்ள முடியும். மலப்பை பராமரிப்பும் முக்கியம்.

# சைபர் வலையிலிருந்து சிறாரை மீட்பது எப்படி?




பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை அனைவரையும் இழுத்துப் பிடித்து இணைத்து வைத்திருக்கும் தொழில்நுட்பம், இணையம். கணினியும் இணையமும் சர்வ நிச்சயமாகக் கற்றே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் இன்றைய சிறார். கல்வி, கலை விளையாட்டு, தனித்திறன் வளர்ப்பு என எல்லா வகைகளிலும் அவர்களுக்கு உதவும் இணையத்தில் சில பேராபத்துகளையும் அவர்கள் கடந்து வரத்தான் வேண்டியிருக்கிறது.

ஆம், சைபர் குற்றவாளிகள் சிறாரைக்கூட விடுவதில்லை. அவர்களை இணையத்தில் பின் தொடர்ந்து, அவர்களை அச்சுறுத்தி உளவியல் மற்றும் உடல்ரீதியாக மிகப் பெரும் தாக்குதலை நடத்துகிறார்கள்.

**சிறார் மீதான சைபர் குற்றங்கள் அதிகரிக்க காரணம் என்ன?**

மிக நிச்சயமாக இணையப் பயன்பாடும், ஸ்மார்ட் சாதனங்களின் உபயோகமும்தான் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பிள்ளைகள் என்று வந்துவிட்டால் செலவழிக்க நாம் தயங்குவதில்லை. கடந்த இரு வருடங்களில் ஒன்லைன் கல்வி, அதற்கேற்ப தொடர்ந்த அதிவேக இணையம், பெரிய திரை கொண்ட கணினி அல்லது கைபேசி எனச் சமூகத்தில் அனைத்து வர்க்கமும் அவர்களால் முடிந்த வசதிக்கு இதை உறுதி செய்தார்கள். அதன் இலவச இணைப்பாக குற்றங்களும் அதிகரிக்க தொடங்கியுள்ளன.

சிறார் டிஜிட்டல் விளையாட்டுகளைக்கூட தனிநபராக விளையாடாமல் ஒன்லைனில் குழுவாக இணைந்து




# கேப்டன்

## மோசமான அனுபவம்!

ஏலியன்களுக்கும் மனிதர்களுக்குமான போரில் இறுதியில் வென்றது யார் என்பதுதான் 'கேப்டன்' திரைப் படம். செக்டார் 42 என்ற மனித நடமாட்டமே இல்லாத வனப்பகுதியை மனிதர்கள் உலவும் பகுதியாக மாற்ற நினைக்கிறது அரசு. அதற்காக அனுப்பப்பட்ட படையினர் குழுவினர் மர்மமான முறையில் கொல்லப்படுகிறார்கள். அதையடுத்து வெற்றிச்செல்வன் (ஆர்யா) தலைமையிலான மற்றொரு குழுவும் அப்பகுதிக்கு அனுப்பபடுகிறார்கள். அங்கே ஏலியன்களின் ஆதிக்கம் இருப்பதை அந்தக் குழு உறுதி செய்கிறது. இறுதியில் அப்பகுதியில் உள்ள ஏலியன்கள் கொல்லப்பட்டதா, வெற்றிச்செல்வன் தலைமையிலான குழுவுக்கு கொடுக்கப்பட்ட மிஷன் வெற்றியடைந்ததா என்பது தான் படத்தின் கதை.

கம்பீரமான உடல், மிகையில்லாத நடிப்பு, குழுவை விட்டு கொடுக்காத பண்பு என வழக்கமான தன்னுடைய நடிப்பை இந்தப் படத்திலும் பதிய வைக்கிறார் ஆர்யா. இருந்தாலும்,

விளையாடுகிறார்கள். புதிய நண்பர்கள், அவர்களிடமிருந்து வரும் இன்பாக்ஸ் செய்திகள் அவர்களுக்கு ஓர் ஆர்வத்தை உருவாக்குகிறது. தங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை அறியாதோரிடம் பகிரத் தொடங்குகிறார்கள். இதன் விளைவே சைபர் சிக்கல்களில் மாட்டிக்கொள்வது.

### சைபர் குற்றவாளிகள் எப்படி சிறார்களை அணுகுகிறார்கள்?

சிறாரை அணுகுவதற்கு சைபர் குற்றவாளிகள் அதிகம் தேர்ந்தெடுப்பது சமூக வலைதளங்களைத்தான். தேடுதல் வசதியைப் பயன்படுத்தி, ஸ்பைடர்மேன், டோரா, பிரின்சஸ் எனச் சிறாரின் பயனர் பெயர் மற்றும் வயதை யூகித்துத் தேடுவர். பிறகு அவர்களைப் போலவே தங்களையும் சிறார் எனக் காட்டிக்கொண்டு செய்திகள் அனுப்புவர். உனக்குப் பிடித்ததுதான் எனக்கும் பிடிக்கும் என ஒருமித்த ரசனையை உருவாக்குவர். நாம் நண்பர்களாக இருக்கலாமா எனக் கேள்வி எழுப்பி நம்பிக்கையைப் பெறுவார்கள்.

சமூக வலை தளங்களுக்கு அடுத்தகட்டமாக, ஒன்லைன் விளையாட்டுகளில் இணைந்து விளையாடும் குழுக்களில், சில சமயங்களில் எல்லோருக்கும் பகிரப்படும் பாடசாலை ஒன்லைன் வகுப்பின் இணைப்புகளைப் பயன்படுத்தியும் இவர்கள் சிறாரை அணுகிறார்கள்.

குழந்தையின் நட்பைப் பெற்ற பிறகு அவர்களது பெற்றோர், குடும்ப சூழ்நிலை குறித்த தனிப்பட்ட தகவல்களைப் பெறுவர். அவற்றைக் கொண்டு குழந்தைகளை மிரட்டத் தொடங்கி, பாலியல்ரீதியாக அவர்களைத் துன்புறுத்துவது, மிரட்டிப் பணம் பறிப்பது, அவர்களது உடலைப் புகைப்படமாக எடுத்துத் தரச் சொல்வது, உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் சவால் களில் ஈடுபடச் சொல்வது என அச்சுறுத்தல்களை நிகழ்த்துவர்.

### தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?

பெற்றோர் மிக நிச்சயமாக குழந்தைகளின் இணைய உலகைக் கண்காணிக்க வேண்டும். தேவையில்லாத பட்சத்தில் ஒன்லைனில் அதிக நேரம் செலவிட அனுமதிக்கக் கூடாது. அவர்களுக்கு வரும் குறுஞ்செய்திகள், புகைப்படங்கள், மின்னஞ்சல்களை ஒரு நண்பனைப் போல அருகில் இருந்து கவனிக்கவேண்டும்.

எப்போதும் இல்லாமல் திடீரென அவர்கள் அமைதியாக இருப்பது, பயம் கொள்வது, உறக்கமின்மை போன்றவை இருக்கிறதா எனக் கவனிக்க வேண்டும். அறியாதவர்களிடமிருந்து பரிசுப் பொருட்கள் அவர்களுக்கு வருகிறதா, புதிய நபரிடம் ரகசிய வார்த்தைகளில் பேசிக்கொள்கிறார்களா எனக் கண்காணிக்க வேண்டும்.

யார் கேட்பினும் உனது உடலைப் புகைப்படம் எடுக்கக் கூடாது, அது தவறு என அறிவுறுத்த வேண்டும். குடும்பத்தினரின் இதர புகைப்படங்களையும் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும். சைபர் குற்றங்கள் அவை தொடர்பான சமூக நிகழ்வுகளை அவர்களிடத்தே பேச வேண்டும். சமூக வலைதளங்களில் எது செய்யலாம், எது கூடாது என்ற விழிப்புணர்வைப் பள்ளியில் இருந்தே அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

மிக முக்கியமாக எது நிகழ்ந்தாலும் அதைத் தனது பெற்றோரிடம் மறைக்காமல் சொல்லும் நம்பிக்கையைப் பெற வேண்டும். ஒருவேளை, உங்கள் பிள்ளைக்கு சைபர் அச்சுறுத்தல்கள் நிகழ்வது தெரிந்தால் சிறிதும் தாமதிக்காமல் காவல் துறையை அணுக வேண்டும்.

'சார்பட்டா பர்ம்பரை' படத்தில் நடிப்பில் ஸ்கோர் செய்த ஆர்யாவுக்கு இந்தப் படத்தில் அப்படியான நடிப்புக்கு தீனிப்போடும் காட்சிகள் பெரிய அளவில் இல்லை. ஐஸ்யவர்யா லக்ஷ்மி பெயரளவில் வந்து செல்கிறார். வெறும் காதலுக்காக மட்டுமே பயன்படுத்தபடும் ஒரு கதாபாத்திரம்.

ஆர்யா மீது அவருக்கு காதல் வர சொல்லும் காரணம் படுமோசம். விஞ்ஞானி கதாபாத்திரத்தில் சிம்ரன். அவரது கதாபாத்திரத்தை இன்னும் தெளிவாக எழுதியிருக்கலாம். பின்புலம் சரியாக இல்லாமல், அந்தக் கதாபாத்திரம் குழப்பமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றபடி தன்னுடைய நடிப்பில் கவனம் ஈர்க்கிறார் சிம்ரன். இவர்களை தவிர்த்துவிட்டு காவ்யா ஷெட்டி, ஹரிஷ் உத்தமன், கோகுல்நாத், ஆதித்யா மேனன் தேவையான நடிப்பை கொடுத்துள்ளனர்.

'மிருதன்', 'டிக்டிக்டிக்', 'டெடி' படங்களை இயக்கிய சக்தி சௌந்தர்ராஜன் இந்தப் படத்தையும் இயக்கியிருக்கிறார். 'மிருதன்' படத்தின் மூலம் ஜாம்பிஸை தமிழ் சினிமாவிற்கு அழைத்து வந்தவர். தற்போது 'கேப்டன்' படம் மூலம் ஏலியன்ஸை அழைத்து வந்துள்ளார். புது முயற்சி வரவேற்க வேண்டியது. ஆனால், ஹாலிவுட்டில் அடித்து துவைத்து காய வைத்த கதையை எடுத்து புது மெருகூட்டி நமக்கு கொடுக்க முயன்றிருக்கிறார்.

இருப்பினும் அந்த மெருகூட்டலில் பல சுருங்கங்கள் வெளிப்படையாக தெரிகின்றன. இந்தச் சூழலுக்கு தகுந்தாற்போல படத்தை எளிமையாக்க முயன்றதெல்லாம் சரி. ஆனால், அந்த எளிமையை விஎஃப்எக்ஸில் காட்டியதுதான் பிரச்சினை. மோசமான விஎஃப்எக்ஸ் காட்சிகள் படத்திற்கான ஆன்மாவை குலைப்பதோடு பார்வையாளர்களுக்கு சுத்தமாக ஒட்டவேயில்லை. படத்தின் உயிரே ஏலியன்ஸூம், அதையொட்டி நிகழும் கதையும் தான் எனும்போது, அதை சீர்குலைத்திருப்பது பெரிய பாதகம்.

அத்தனை மோசமான காட்டுப் பகுதியில் ஆர்யா தலைமையிலான 4 பேர் கொண்ட குழுவே திரும்பத் திரும்ப பயணிப்பது, இந்தியாவில் படை வீரர்களுக்கு பஞ்சமா என்ற கேள்வியை எழுப்புகிறது. படத்தில் சுவாரஸ்யம் என்றால், அது அந்த எலியன் மட்டும்தான். அதைத்தாண்டி காட்சியமைப்பில் எந்த சுவாரஸ்யமும் இல்லை. நாயகனுக்கும் வேற்றுகிரக உயிரனத்திற்கும் இடையிலான காட்சிகள் விறுவிறுப்பை கூட்ட தவறிவிட்டன.

அதேபோல, நாயகனின் குழு எதிர்கொள்ளும் சவால்கள் பார்வையாளர்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அந்த வேற்றுகிரக உயிரினம் இங்கே வந்ததற்கான காரணம் சொல்லப்படாதது, குறிப்பாக க்ளைமாக்ஸ் காட்சியில் அதுவரை பில்டப் கொடுத்திருந்த வித்தியாசமான உயிரினம் காட்டும்போது ஏமாற்றம் மேலொங்குவது, அதைத் தொடர்ந்து வரும் மோசமான விஎஃப்க்ஸ் கொண்ட சண்டைக்காட்சிகள் பெரும் பலவீனம்.

09

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழிய விடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக் கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன்மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல்வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இந்த வாரச் சொல்

## விடுப்பு

இந்தச் சொல் பெயராகவும் வினையாகவும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பேசப்பட்டு வருகிறது. "திருமணத்துக்காக 5 நாட்கள் விடுப்புக் கேட்டனான்" என்று பெயர்ச் சொல்லாகப் பயன்படுத்துவர். பணிபுரியும் அலுவலகத்தில் 5 நாள்கள் வரை லீவு கோரியதாக இது அர்த்தப்படும். இதைவிட "அங்கபோய் விடுப்புப் பார்க்கப் போறியே", என்று வினைச் சொல்லாகப் பயன்படுத்துவர். இதில் வரும் விடுப்பு என்பது புதினம் பார்ப்பது என்ற அர்த்தத்தில் பேசப்படுகிறது. இதைவிட "அங்கபோய்த் தங்க முடியாது. அந்த மனிசி விடுப்புப் புடுங்கிப்போட்டுத்தான் விடும்" இதில் விடுப்பு என்பது ஒருவரின் தனிப்பட்ட விடயத்தைக் கேள்விகள் மூலம் ஆராய்வது என்று அர்த்தப்படும்.

பொதுவாக யாழ்ப்பாண மக்கள் புதிதாக ஒருவரைச் சந்திக்கும்போது, ஊர் எது, தொழில் என்ன, படித்த பள்ளிக்கூடம் எது, குறிப்பிட்ட நபரின் சாதி என்ன என்பதை அறிவதற்கு விடுப்புக் கேட்பது வழக்கம். பேருந்து, ரயில் பயணங்களின் போதோ, ஓரிடத்தில் தங்கியிருக்கும்போதோ இவ்வகை விடுப்புகள் பிடுங்கப்படுவது அதிகம். இது பலருக்குத் தலையிடியாகவும் இருக்கும்.

# தமிழில் புதிய சொல்லாக்கம் மிக அசியம்

பூ.இராமநாதன்

அறிவுப்புலங்கள் ஆங்கிலத்தில்தான் பெருகிவருகின்றன. அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் தமிழில் சொற்களை உருவாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்லப்படும் கருத்தைத் தமிழுக்கு இசைவாக மொழிபெயர்க்க வேண்டியிருக்கிறது. ஆனால், அவற்றிலெல்லாம் போதாமை நிலவுகிறது. ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும், புத்தகங்களிலும் நாள்தோறும் இந்தப் போதாமையைப் பார்க்க முடிகிறது. இதை நாம் பேசித்தான் ஆக வேண்டும்.

**தமிழ் லிபியில் ஆங்கிலம்**

ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எழுதுகிற பழக்கம் பரவலாக இருக்கிறது. இதன் மறுதலையும் (கன்வெர்ஸ் - converse) உண்மைதான். அதாவது ஆங்கில எழுத்துருக்களில் தமிழை எழுதுவது. புத்தாயிரப் பிள்ளைகள் சமூக வலைதளங்களில் சரளமாகப் பயன்படுத்தும் அவ்வகை எழுத்துக்கு - தங்கிலீஷ் - என்று பெயர். எனில், நாம் இங்கே மறுதலையைப் பற்றியல்ல, தேற்றத்தைப் பற்றியே பேசப் போகிறோம். எழுத்தாளர் சுஜாதாவின் கட்டுரை ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட வாக்கியத்துடன் இந்த உரையாடலைத் தொடங்கலாம்.

"நல்ல கிராஃபிக் ஆர்ட்டிஸ்ட்டாக இருந்தால் மாக்கின்டோஷ் கணிப்பொறி வாங்கலாம். அதை வாங்கி வைத்து, லெட்டர் அடிக்கவும் கேம்ஸ் விளையாடவும் பயன்படுத்துவது முட்டாள்தனம்."




இப்போது கணினி என்கிற சொல் நிலைபெற்றுவிட்டது. சுஜாதா இதை எழுதிய காலத்தில் கணிப்பொறியும் பயன்பாட்டில் இருந்தது. நல்லது. அடுத்து, மாக்கின்டோஷ் என்பது பெயர்ச்சொல், மொழிபெயர்க்க வேண்டியதில்லை. சரி. அடுத்து, கிராஃபிக் ஆர்ட்டிஸ்ட் எனும் தொடர். தமிழில் வரை கலைஞர், சரளமாகப் புழக்கத்தில் வரவில்லைதான், ஆனால் புழங்கினால்தானே பயன்பாட்டுக்கு வரும்? போகட்டும். ஆனால், லெட்டருக்கும் கேம்ஸுக்கும் கூடவா சுஜாதா ஆங்கிலத்தை நாடவேண்டும்?

இது பழைய கட்டுரை. சமீபத்தியச் செய்தியொன்றைப் பார்க்கலாம். சென்னையில் சதுரங்கப் போட்டி நடந்து முடிந்தது. அது பற்றிச் செய்தி வெளியிட்ட பெரும்பாலான ஊடகங்கள் செஸ் போட்டி என்றே கூறின.

சதுரங்கம் யாவரும் அறிந்த பழந்தமிழ்ச் சொல். ஆனால் எந்த ஊடகமும் அதைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. போகட்டும். சென்னையில் நடந்த போட்டிகளில் இரண்டு பிரிவுகள் இருந்தன. இரண்டாவது பிரிவு மகளிருக்கானது. முதல் பிரிவு ஓபன் (Open) எனப்பட்டது. இதில் தொழில்முறை ஆட்டக்காரர்கள் மட்டுமல்ல, தொழில்சாரா (அமெச்சூர்) வீரர்களும் விளையாடலாம். தமிழில் பொதுப்பிரிவு என்றழைக்கலாம். ஆனால், பல தமிழ் ஊடகங்கள் ஓபன் என்றே அழைத்தன. அவை மொழிபெயர்ப்பதற்கு மெனக்கெடவில்லை.

அடுத்தது அதே போட்டி தொடர்பான மற்றொரு செய்தியில் சென்னையில் பயன்படுத்தப்பட்டவை "சென்சார் செஸ் போர்ட்டுகள்" என்று கூறப்பட்டிருந்தது.

இந்தச் செய்தியில் 'சென்சார்' (censor) என்று ஒரு சொல் வருகிறது. எந்த தணிக்கைத் துறையும் போட்டி நடந்த அரங்கிற்குள் வரவில்லை. அது - சென்சர் - (senser). உணரி என்பது அதன் தமிழ்ச் சொல். 'மெகா'விற்கும் 'போர்டு'க்கும் தமிழைத் தேடாத நாளிதழ், சென்சருக்குத் தேடும் என்று எதிர்பார்ப்பது கொஞ்சம் அதிகம்தான்.

**மொழிக்கு ஒவ்வாத மொழிபெயர்ப்பு**

இப்படி நேரடியாக ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவது ஒருபுறம். அடுத்து, ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது தமிழுக்கு இசைவாக மொழிபெயர்க்

காமல் இயந்திரத்தனமாகப் பெயர்ப்பது இன்னொரு புறம். இந்த வாக்கியத்தைப் பாருங்கள்.

"கட்டுநாயக்கா வானூர்தி நிலையம் ஆண்டுக்கு 2 கோடிப் பயணிகளைக் கையாண்டு வருகிறது" இதில் ஓர் அன்னியத்தன்மை தொனிக்கிறது. "ஹேண்ட்லிங் பாசஞ்சர்ஸ்" (Handling passengers) என்கிற சொற்றொடர் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. உயிரும் உடலும் உள்ள மனிதர்களைக் 'கையாள்வதாக' எழுதுவது தமிழ்க் கலாச்சாரத்திற்கு இசைவானதில்லை. இதைத் 'தமிழ் மரபின் உடல்மொழி' என்கிறார் ஆர்.பாலகிருஷ்ணன்.

தனது 'ஜேர்னி ஒஃப் எ சிவிலைசேஸன்: இண்டஸ் டூ வைகை' (Journey of a Civilization: Indus to Vaigai) (ரோஜா முத்தையா ஆய்வு நூலகம், 2019) புத்தகத்தின் மூலம் அறிவுலகத்தில் பெரும் அசைவை ஏற்படுத்தியிருப்பவர் பாலகிருஷ்ணன். தனது சமீபத்திய முகநூல் பதிவொன்றில், அவர் இப்படி எழுதியிருந்தார்: "தமிழ் மரபின் உடல்மொழியை உணராதவர்கள் தமிழ் மொழியைக் கற்பது கடினம்" இத்தோடு, தமிழ் மரபின் உடல் மொழியை உணராதவர்கள் தமிழ் மொழியை மொழி பெயர்ப்பது கடினம் என்றும் சேர்த்துக்கொள்ளலாம்.

தமிழ் மரபு மனிதர்களைக் கையாள்வதில்லை. ஆகவேதான், அந்த மொழிபெயர்ப்பு தமிழுக்கு அன்னியமாக ஒலிக்கிறது. அந்த வாக்கியத்தை இப்படி எழுதியிருக்கலாம் "கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தை ஆண்டுக்கு 2.2 கோடிப் பேர் பயன்படுத்தி வருகிறார்கள்." இப்போது இது தமிழ் வாக்கியமாக மாறிவிட்டது.

**கை நிறையக் காசு, என்றாலும் கடன்**

இன்னுமோர் அநீதியும் நடக்கிறது. ஆங்கிலத்தில் இருந்து தமிழில் எழுதும் சிலர், ஏற்கனவே அதற்கு இணையான சொல் தமிழில் இருப்பதை அறியாமல் புதிதாக ஒரு சொல்லை உருவாக்குகிறார்கள். கொரோனாவின் தொடக்க காலத்தில் அதற்கான நதிமூலத்தை அறிவியாளர்கள் ஆராய்ந்தனர். கள்ளச் சந்தையில் விற்கப்படும் விலங்குகளின் வழியாக இந்த நோய் உருவாகியிருக்க வேண்டும் என்கிற முடிவைப் பலரும் வந்தடைந்தனர். கோவிட், வௌவாலிருந்து மனிதனுக்குத் தொற்றியிருக்கலாம் என்பது பரவலான கருத்து. ஆன்டீடர் (Anteater) எனும் சிறு விலங்கிலிருந்தும் இது தொற்றியிருக்கலாம் என்றும் சில அறிவியலாளர்கள் கருதினார்கள். இந்தச் செய்தியை வெளியிட்ட தமிழ் ஊடகங்கள் எறும்புத் தின்னிகள் என்று எழுதின. இந்த விலங்கு தமிழுக்குப் புதியதில்லை என்பதும் அலங்கு என்று அவை அழைக்கப்படுகின்றன என்பதையும் மொழிபெயர்த்த ஊடகங்கள் அறிந்திருக்கவில்லை.

இதைப் போலவே மாங்குரோவ் காடுகள் என்கிற சொற்றொடர். இது மாங்குரோவ் காட்டின் (Mangrove Forest) மொழியாக்கம். இவை கடலின் கரையோரங்களில் உள்ள சதுப்பு நிலங்களில், உவர் நீரில் வளரும். பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில், மனிதக் கரங்களின் பேராசைக்கு இரையானது போக, இவை இன்னும் மீதமிருக்கின்றன. இதற்குத் தமிழ்ப் பெயர் இருக்கிறது "அலையாத்தித் தாவரங்கள்". அதை அறியாத செய்தியாளர்கள்தான் மாங்குரோவ் காடுகள் என்கிற சொற்றொடரை இறக்குகிறார்கள்.

இந்த இடத்தில், 'அருவியை நீர்வீழ்ச்சி என்று யாரேனும் சொன்னால் மனம் பதறுகிறது' என்கிற விக்கிரமாதித்யனின் கவிதை வரி நினைவுக்கு வருகிறது. உயிரினங்கள் பற்றியும் சூழலியல் பற்றியும் நமக்குப் போதிய விழிப்புணர்வு இல்லாததால் பராம்பரியமான சொற்களை இழந்து வருகிறோம். எல்லாத் துறைகளிலும் இந்த நிலைதான். அதனால்தான் அருமையான தமிழ்ச்சொல் இருக்க, ஆங்கிலத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? "கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ?" என்று கேட்டார் சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை. "கனியிருக்கக் காய் கவர்ந்தற்று" என்று சொன்ன பாட்டனின் தோள்களில் ஏறி நின்றுகொண்டுதான் அவர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கவேண்டும்.

**கலைச்சொல்லாக்கம்**

சொல் வங்கியில் இருக்கும் சொற்களைப் பற்றிய போதமில்லாமல் புதிய சொற்களை இறக்குவது ஒரு பிரச்சினை என்றால், புதிய கலைச்சொற்களை உருவாக்கிக்கொள்ளாதது இன்னொரு பிரச்சினை. ஒரு சமீபத்திய எடுத்துக்காட்டைப் பார்ப்போம்.

தொற்றுநோய்ப் பரவலில் மூன்று நிலைகள் உள்ளன. அவை 'எண்டெமிக்', 'எபிடெமிக்', 'பேண்டமிக்' (endemic, epidemic, pandemic) என்பன. பரந்துபட்ட பகுதியில் பரவும் நோய் - எண்டமிக்' (endemic) எனப்படும். நிமோனியா, அம்மை முதலான நோய்கள் இந்தப் பிரிவின் கீழ் வரும். குறுகிய காலத்திற்குள் பெரும் நிலப் பரப்பில் பரவும் நோய் 'எபிடெமிக்' (epidemic). சார்ஸ் (2003), மெர்ஸ் (2012), நிப்பா (2018) முதலான நோய்கள் இந்தப் பிரிவில் வரும். 'எபிடெமிக்' (epidemic) வேகமாகப் பரவும். உச்சத்தை எட்டும். பின் தேய்ந்து இல்லாமலாகும். மாறாக 'எண்டமிக்' (endemic) எந்தக் காலத்திலும் வரும். மீண்டும் மீண்டும் வரும். கவி வாக்கைப் போல, அது நிரந்தரமானது, அதற்கு அழிவில்லை.

மேலும், எபிடெமிக் பெரிய பிராந்தியத்தில் பரவும். சார்ஸ் சீனாவிலும் ஹாங்காங்கிலும் சிங்கப்பூரிலும் கால் பரப்பியது. பின் மெல்லக் காணாதாயது. அதேபோல, மெர்ஸ்ஸின் வீச்சு மத்திய கிழக்கையும், நிப்பாவின் வீச்சு கேரளத்தையும் தாண்டவில்லை. மாறாக 'பேண்டமிக்'' (pandemic) நாடுகளுக்கும் கண்டங்களுக்கும் கட்டுப்படாமல் எல்லைக் கோடுகளை முறித்துக்கொண்டு உலகம் முழுதும் பரவும் வலுவுடையது. ஸ்பானியக் காய்ச்சல் (1918-20), ஆசியக் காய்ச்சல் (1957-58), பன்றிக் காய்ச்சல் (2009), கோவிட்-19 (2019-2022) முதலான நோய்கள் உலகெலாம் தம் இருப்பை நிலை நிறுத்தின. பேண்டமிக்கும் எபிடெமிக் போல ஒரு கட்டத்தில் தேய்ந்து இல்லாததாகும்.

நோயின் தீவிரமல்ல, அது பரவும் வேகமும் நிலப் பரப்புமே அந்தத் தொற்று எபிடெமிக்கா அல்லது பேண்டமிக்கா என்பதைத் தீர்மானிக்கும். சார்ஸால் பாதிக்கப்பட்டவர்களில் பத்தில் ஒருவரால் பிழைக்க முடியவில்லை. மாறாக, கோவிட் தீண்டிய பலரும் மீண்டுவந்தார்கள். எனினும் முன்னது எபிடெமிக், அதன் வீச்சு கிழக்காசியாவைத் தாண்டவில்லை. பின்னது உலகம் முழுவதையும் ஆக்கிரமித்தது.

தமிழில் இந்த மூன்று சொற்களுக்கும் இணையான கலைச்சொற்கள் ஆக்கப்படவில்லை. எல்லாவற்றுக்கும் பெருந்தொற்றுதான். கொள்ளை நோய் என்கிற பதமும் புழக்கத்தில் இருக்கிறது. பிளேக், காலரா, அம்மை, சாரஸ், கோவிட் எல்லாம் நமக்கு கொள்ளை நோய்தான். மனிதர்கள் கொத்துக் கொத்தாக மடிந்த காலத்தில் உருவானது கொள்ளை நோய் என்கிற சொல். இன்று மருத்துவம் வளர்ந்து, குறுகிய காலத்தில் தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டு நோயைச் சக்தியோடு எதிரிட முடிகிற காலம். ஆனாலும், நாம் கொள்ளை நோய்க்கு விசுவாசமாக இருக்கிறோம்.

கோவிட்-19, வூகானில் தொடங்கி சீனாவில் பரவிய போது அது 'எண்டமிக்' (endemic) என்றும், பிற்பாடு கண்டங்களையும் சமுத்திரங்களையும் தாண்டியபோது, 'பேண்டமிக்' (pandemic) என்றும் அறிவித்தது உலக சுகா தார மையம். இப்போது நோயின் வீரியம் குறைந்துவிட்டது. இந்தியாவில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 10,000க்குக் குறைவாகவும், மரிப்போரின் எண்ணிக்கை 30க்கும் குறைவாகவும் ஆகிவிட்டது. உலகெங்கும் இப்படியான நிலை வந்துவிட்டது. மற்ற பேண்டமிக் போல இது மறைந்துபோகாது என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

அதாவது, கோவிட்டுடன் நாம் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். ஆனால், ஊரும் உலகமும் ஸ்தம்பித்து நின்ற நிலையிலிருந்து நாம் மீண்டு, வெகுதூரம் வந்துவிட்டோம். இனியும் இதை 'பேண்டமிக்' (pandemic) என்று அழைக்க வேண்டாம். ஆனால், இது எண்டமிக்காக நீடிக்கும் என்று பல அறிவியாலாளர்கள் சொல்லிவருகிறார்கள். உலக சுகா தார அமைப்பு இதை ஏற்றுக்கொண்டால் இனிமேற்கொண்டு கோவிட் பேண்டமிக் அல்ல, எண்டமிக் என்று அறிவிக் கும்.

கோவிட் சீனாவில் எபிடெமிக்காக தொடங்கியது. பேண்டமிக்காக வளர்ந்து உலகையே உலுக்கியது. அதற்கு அழிவில்லை. இனி இது எண்டமிக்காக மாறும். இதைத் தமிழில் எப்படிச் சொல்வது? கோவிட், பெருந்தொற்றாகத் தொடங்கி, பெருந்தொற்றாக வளர்ந்து, பெருந்தொற்றாக மாறும் என்றா? ஆங்கில ஊடகங்களிலும் மருத்துவத் துறையிலும் கோவிட்டின் குண மாற்றம் குறித்து காத்திர மான உரையாடல் நடந்துவருகிறது. தமிழில் நடைபெறு வதாகத் தெரியவில்லை. அதற்கு ஆர்வக் குறைவு மட்டும் காரணமில்லை. இந்த மூன்று சொற்களுக்கும் முறையான கலைச்சொற்கள் ஆக்கப்படாததும் ஒரு காரணம். இது தமிழ் வாசகர்களுக்கு எத்தனை பெரிய இழப்பு?

"துறைச் சொற்கள் புழக்கத்தில் வராதது பெரும் குறை. துறைச் சொற்கள் இல்லாமல் அதைப் பற்றிப் பேசுவது ஆகாயத்தோடு சிலம்பமாடுவது போன்றது" என்கிறார் தியோடர் பாஸ்கரன். அவர் சூழலியலைக் குறித்துப் பகிர்ந்து கொண்ட இந்த ஆதங்கம் எல்லா அறிவுத் துறைகளுக்கும் பொருந்தும்.

**சிக்கல்கள் மூன்று**

கலைச்சொற்களை உருவாக்கும் பொறுப்பு பல்கலைக் கழகங்களுக்கும், ஆய்வு நிறுவனங்களுக்கும் உள்ளது. அவர்கள் அதைச் செய்கிறார்கள். ஆனால், அதில் பிரதா னமாக மூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவதாக, போதிய வேகத்தில் கலைச்சொற்கள் உருவாக்கப்படுவ தில்லை. இரண்டாவதாக வல்லுநர்கள் ஆக்கும் சொற்களில் பல புழங்கத்தக்கனவாக இருப்பதில்லை. மூன்றாவதாக, தமிழில் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதில் சீர்மை இருப்பதில்லை.

**வேகம்:** முதல் பிரச்சினை வேகம். தமிழில் துறை சார்ந்த கட்டுரைகளை எழுதுபவர்கள் தாங்களே சொற் களை உருவாக்குகிறார்கள். அந்தச் சொற்கள் ஏற்புடையதாக இருந்தால் பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் அதைப் பெருவழக்கிற்குக் கொண்டுவர வேண்டும். இதைக் குறித்துத் துறை சார்ந்த அறிஞர்களும் தமிழறிஞர்களும் உரையாடும் ஒரு வெளி உருவாக்கப்பட வேண்டும். கையே டுகளும் நூல்களும் பதிப்பிக்கப்பட வேண்டும்.

**புழக்கம்:** இரண்டாவதாக, தமிழறிஞர்கள் உருவாக்கும் சொற்கள் எப்படி இருக்கின்றன? சாப்ட் டிரிங்கை (Soft drink) இன்குடிநீர்மம் என்கிறார்கள். சைக்கிளை ஈருருளி என்கிறார்கள். இந்தப் பண்டிதர்களுக்குத் தனித்தமிழில் அக்கறை இருக்கிறது. ஆனால், அந்தச் சொல்லின் புழங்கு மதிப்பைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. இப்படியான கலைச்சொற்களை உருவாக்குகிறவர்களைப் பற்றிப் பேராசிரியர் தங்க.ஜெயராமன் இப்படிச் சொல்கிறார்: "வாசிப்பவரையும் கேட்பவரையும் குறைந்தபட்சம் கற்பனை செய்துகொண்டாவது ஒருவர் கலைச்சொற்களை உரு வாக்குகிறாரா என்பது சந்தேகமே. அவர் மனிதக்கூட்டத்தில் இல்லாமல் தனிமையில் செயல்படுகிறார்."

***சீர்மை:*** மூன்றாவது பிரச்சினை துறை சார்ந்த சொற்க ளைப் பயன்படுத்துவதில் சீர்மை இல்லை. டாய்லட் என் கிற சொல்லுக்குக் கழிவறை என்கிற சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பேச்சு வழக்கில் இன்னும் கக்கூஸ் இருக்கிறது. ஒப்பனை அறை என்கிற தொடரும் புழக் கத்தில் இருக்கிறது. எனில், இதுகாறும் யாரும் பயன் படுத்தாத ஒரு சொல்லை சென்னை வானூர்தி நிலையத்தில் பார்த்தேன்- ஒதுங்கிடம்.

---

**துறைச் சொற்கள் புழக்கத்தில் வராதது பெரும் குறை. துறைச் சொற்கள் இல்லாமல் அதைப் பற்றிப் பேசுவது ஆகாயத்தோடு சிலம்பமாடுவது போன்றது**

---

இப்படி மொழிபெயர்த்தவரை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. கிராமத்தில் வெளிக்கிருக்க சில ஒதுக்குப்புறமான இடங்களை வைத்திருந்தார்கள். ஒதுங்கப் போகிறேன், கொல்லைக்குப் போகிறேன் என்றெல்லாம் சொல்வார்கள். வானூர்தி நிலையத் தமிழறிஞர் அந்த வழக்கத்திலிருந்து இந்தச் சொல்லை உருவாக்கி இருக்க வேண்டும். கொல் லிடம் என்கிற பதத்தையும் அவர் பரிசீலித்திருக்கக்கூடும். அந்தச் சொல் சுட்டும் வன்முறையைக் கருத்தில் கொண்டு, நல்வாய்ப்பாக, அதை அவர் தவிர்த்திருக்க வேண்டும்.

ஆனால், திறந்தவெளியில் மலங்கழிப்பதன் சுகாதாரக் கேடுகளை பிரதமரே பரப்புரைத்துவரும் ஒரு நாட்டில், அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் ஒரு சொல்லை உரு வாக்குவது அறிவியலுக்கும் அரசியலுக்கும் முரணானது இல்லையா?

**கூறுகள் நான்கு**

ஆக, தமிழில் எழுதுவதற்கு ஆங்கிலத்துடனான ஊடாட்டம் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. ஏனெனில், அறிவுத் துறைகள் அனைத்தும் நமக்கு ஆங்கிலம் வழி யாகவே அறிமுகமாகின்றன. இதுகாறும் நாம் பேசியவற்றை நான்கு கூறுகளாகத் தொகுத்துக்கொள்ளலாம்.

ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எழுதும் வழக்கம் பரவலாக இருக்கிறது. இது நம் மொழி வளர்ச் சிக்கு உதவாது. தமிழைப் பின்னோக்கித் தள்ளிவிடும். இதை நாம் கவனமாக இயன்றவரை தவிர்க்க வேண்டும். ஆங்கிலத்திலிருந்து தமிழில்

75

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

நாம் போதனைக்கு உட்படுத்தப்பட்டு எமக்குள்ளே திணித்து அடையப்பட்ட சுவர்க்கம் நரகம் தொடர்பான மனப்பதிவுகள்தான் துறவறம் அல்லது சந்நியாசம் என்பதை வழிப்படுத்துகின்றனவா? சரி சந்நியாசம் என்பது என்ன? அதிலொன்றுமே இல்லை. எந்தவொரு பயனுறுதிப்பாடான செயலுமின்றி ஓய்ந்துவிடுதல் என்று கொள்ளமுடியும். அப்படியானவர்கள் குறிப்பிடுவதுபோல இறைவனை (நினைத்திருத்தல், தியானித்தல் என்பதெல்லாமே இல்லாத ஒன்றை) அடைதல் என்பதற்காக இருப்பவற்றைத் துறத்தல் என்பதே, அப்படியா?

அப்படியாயின் அனைத்தையும் துறத்தல் என்பது சாத்தியமானதா? என்பதற்கப்பால் அப்படி முடியுமாயின் அவ்வாறான உறுதியுள்ள ஒருவன் ஏன் அனைத்திலிருந்தும் ஒதுங்கியிருக்கவேண்டும்? அனைத்தையும் துறத்தல் என்பதானது என்ன? ஆசைகளையா தேவைகளையா ஒதுக்கி வைத்துக்கொள்வதாகக் கருதுகிறார்கள்? "மனதிற்குள்ளாகவே ஆலயம் கட்டி மோட்சமடைந்தார் பூசலார்" என நம்பவைக்கப்பட்டதில் அது பூசலார் கொண்டது ஆசையா? தேவையா? நம்பிக்கையா?




வாழ்தல் என்பதற்குள்ளே தேவைகள் தவிர்க்கப்பட முடியாதவை. இது யதார்த்தமானது. உணவு, உடை, உறையுள் என வகுத்திருக்கிற அடிப்படைத் தேவைகளை அடைதல் என்பதற்கான உழைப்பு அவசியமானது. மட்டுமல்ல யதார்த்தமாக உள்ள உலகில் உள்ளது. கற்பனையால் புனையப்பட்டு மனதினது பகுத்துணரும் பகுதியை அழித்தடைத்திருக்கும் இறைவனடி, சொர்க்கம் போன்றவற்றை நினைத்து அதையடையப் பேராசை கொள்ளுதல்தான் துறவா?

சொர்க்கம், நரகம், இறைவனடி என்பதற்கப்பால் மன அமைதிக்கானதுதான் துறவு எனக்கொண்டால் மன அமைதி எங்கோ தொலைவிலா இருக்கிறது? ஆசைகள் வழி அலையும் மனதை துன்புறுத்தி ஒடுக்கி ஒரு நிலைப்படுத்துவது எவ்வாறென்பதை கடமைகளைத் தவறவிட்டு ஒதுங்கியிருந்துதான் எண்ணவேண்டுமா? எமக்குள்ளேயே இருக்கிற மனதை அமைதிப்படுத்த எம்மையே வருத்துவது சரியான வழிதானா? தொலைந்து போயிருப்பதாக எண்ணிக்கொண்டு இருக்கிற அமைதியையும் தொலைத்து அலைவது புத்திசாலித்தனமானதா?

மொழிபெயர்க்கும்போது, அது தமிழுக்கு இசைவாக இருக்கவேண்டும். தமிழ் செழுமையான மொழி. சூழலியல், காட்டுயிர் போன்ற துறைகளில் நமது சொல்வங்கி நிரம்பி வழிகிறது. கையிருப்பிலுள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும். புதிய சொற்களை ஆக்குவது அவசியமற்ற பணி. எல்லா அறிவியல் துறைகளிலும் புதிய கலைச் சொற்களை உருவாக்க வேண்டும். அவற்றை விரைவாகச் செய்ய வேண்டும். அந்தச் சொற்கள் மக்களின் புழங்கு மொழிக்கு நெருக்கமாக இருக்க வேண்டும். புதிய சொற்களைப் பயன்படுத்துவதில் சீர்மை இருந்தால் அவை விரைவில் புழக்கத்திற்கு வரும். இந்தச் சொற்களை உருவாக்குகிறவர்களுக்கு துறை சார்ந்த அறிவும், இருமொழிப்புலமையும் இருக்க வேண்டும்.

இந்த நான்கு கூறுகளையும் மனதில் கொண்டு முன்கை எடுத்துச் செயல்பட வேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு மட்டுமன்றி மாகாண அரசுக்கும் உண்டு. தொடர்புடைய துறைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் ஆய்வு நிறுவனங்களுக்கும் இருக்கிறது. அவை தொடர்ச்சியான உரையாடலைப் பல்வேறு தளங்களில் நிகழ்த்தவேண்டும். கையேடுகளும், அகராதிகளும், கலைக்களஞ்சியங்களும் பதிப்பிக்க வேண்டும். இவையெல்லாம் செய்யப்படும்போது தமிழ் உரைநடைக்கு ஆங்கிலம் எனும் இரவல் கால் தேவைப்படாது. தமிழ் சொந்தக் காலில் நிற்கும். தமிழ் அதற்கான தகுதியுடைத்தது. வல்லுநர்களும் அரசும் அக்கறையோடு செயல்பட்டால் இது சாத்தியமே.

செய்யும் தொழில் நேர்த்திவழி பிறரும் பயன்பெறத்தக்க வழிகள் எதுவுமில்லையா? செய்கிற கருமம் மீதாக பற்று வைத்து வினைத் திறனோடு அதனைச் செய்வதைவிடுத்து அதனாலெழும் ஒருவித அமைதியை அனு பவிக்கத் தெரியாமல் ஓய்ந்து, ஒதுங்கியிருப் பது மனதுக்கு அமைதியைத் தரும் என்ப தானது சுயபுத்தியுள்ள ஒருவனால் எண்ணிச் செய்யப்படும் ஒரு செயலாகுமா? நாம் ஏற் கனவே பகிர்ந்துகொண்டதைப் போல செய லொன்றை கவனக்குவிவோடு செய்து விளை வின் மூலமான திருப்தியை அடைய முடி யாது தவிக்கும் ஒருவன் துறவறத்தின் மூலம் அடையலாமென எண்ணுவதை நினைக்கச் சிரிப்பாக இல்லையா?

ஒன்றைச் செய்வதற்கான பக்குவத்தைத் தன்னுள்ளேயே ஏற்படுத்தலாமென எண்ண, செயற்பட முடியாத ஒருவன் எல்லாம் துற ந்து இறைவனை அடையப்போகிறேன் என்று எண்ணிச் செயற்படுவதை ஏமாற்று வித்தையென்றுதான் சொல்லவேண்டும். ''கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போக முற்படுதல்'' என்பதாகவே நாம் கருதவேண்டும். வேறொன் றுமில்லை. தன்னைப்போலவே எம்மையும் சிந்திக்க முடியாத ஒருவனாகக் கருதும் ஒரு வனாலேயே துறவு என்பதைப் பெருமை யாகக் கூறித்திரிய முடியும்.

நேர்மையாக வருந்தி உழைத்துப் பெறு கிற மன அமைதியை உண்மையில் அறி யாத ஒருவன்தான் அதனை மந்திரத்தால், பூசைகள் வழிபாடுகள், தவம் போன்றவற் றால் பெறலாம் எனக் கருதுகிறான். அதன் உச்சமாக துறவு என்பதனை நம்புகிறான். ஆசையைத் துறத்தல் என்பதே ஒரு உச்ச நிலை ஏமாற்றுதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த உணர்வு கொண்ட ஒருவன் இயலாமையினால் துவண்டு செய் வதறியாது தன்னைச் சமூகத்திலிருந்து விலக் கிக்கொண்டு துறவறம் என்கிற மறைப்பைத் தஞ்சமடைகிறான்.

சுரி துறவு எனகிற ஒன்று சரியானதென்றே கொண்டாலும் அது அமைதியைத் தருமா? ஒதுங்கியும் ஒதுக்கியும் வாழ்கின்ற வாழ் வினது சாரம் என்ன? அங்கே எந்த இடத் தில் அவனது அமைதியை அவன் கண்ட டைவான்? அவனிடம் யதார்த்தத்தில் உள்ள ஓரிடம் ஏதென்றறியாத நிலையில் அந்த இடத்தை எப்படித்தான் கண்டடைவான்? நாம் கருதுகிற அமைதி இருக்கும் இடம் எமது மனமே என்பதைத் தெளிவாக அறிந்துகொள் ளத் தவறி எங்கெங்கோ தேடித் திரிகிறோம்.

துறவு என்பதே சிக்கலுக்குள் சென்று மாள்வதற்கானவழிதான் என்பதை முதலில் உணர்ந்தகொள்வது அவசியமானது. நாம் கற்பித்து வைத்திருக்கிற சொர்க்கம் நரகம், பாவம், புண்ணியம், நன்மை, தீமை என எதனையும் சந்திப்பதற்கான அச்சந்தான் சந்நியாசமா? சிந்திப்போம்.



கதிரேசன் காத்தவராயன்

# ஆருக்குத்தான் தெரியும்?

சுப்பிரமணியம் மாஸ்ரர் ரண்டு மூண்டு நாளாய் ஏதோ காச்ச லெண்டு ஆஸ்பத்திரியிலை இருந்து வந்திருந்தாராம். அப்ப தான் கேள்விப்பட்டனான். உடனையே அவற்றை வீட்டுக்குப்போனன். இங்கை மாஸ்ரர் ஆறுதலாய் சாய்மனைக் கதிரையிலை இருந்தார். அங்காலையாய் முருகேசர் அமைதியாய் இருந்தார். சுதன் தோய்ச்ச உடுப்புகளை கொடியிலை காயப்போட்டுக்கொண்டிருந்தான். அவன் தான் முதலிலை என்னைக் கண்டிட்டு ''வாங்கோ மாமா...'' எண்டு கூப் பிட்ட குரலுக்கு மாஸ்ரரும் முருகேசரும் கண்டு இருக்கச் சொல்லிச்சி னம்.


''என்ன மாஸ்ரர், என்ன நடந்தது?'' எண்டு நான் கேட்டதுக்கு ஒரு சிரிப்போடை ''ஓ.. தலையிடியோடை காய்ச்சல், வாய்க்கச்சல் மேலு ழைவும், இஞ்சை ஆஸ்பத்திரிக்குத்தான் போனனான்.. அவை என்ன காச்சலோ தெரியாது, கனவகையிலை வருத்தங்கள் உலாவுறதாலை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிப்போட்டினம், பயந்த மாதிரி ஒண்டுமில் லையாம்'' எண்டார்.

''ஓமோம்.. மாஸ்ரர் இப்ப புதிசு புதிசாயல்லே வருத்தங்கள் வருகு துகள்'' எண்டு நான் முடிக்கயில்லை ''வடிவாய்ச் சோதிக்கிற பஞ்சியி லையும் புதுப் புது வருத்தமெண்டுமல்லே சொல்லுகினமோ எண்டு மல்லே ஒரு கதை'' எண்டு வழக்கம் மாதிரி நிப்பாட்டினார் முருகேசர். அதுக்குள்ளையும் ஏதாலும் இருக்கத்தான் செய்யும் வில்லண்டமான கதையள். நான் வாயைக் கிளறாமல் இருந்திட்டன்.

சுதனும் வந்து அங்காலை இருந்து கதைக்குள்ள நுளைஞ்சான். ''இப்ப என்ன ஒரு வருத்தத்தை நினைச்சு ஆஸ்பத்திரிக்குப் போனால் அது கும் பிறைவேற்றெண்டால் கன வருத்தங்களைக் கண்டுபிடிக்கினம். ஆக்களுக்கும் ஆரோக்கியமில்லை, வருத்தங்கள் வருந்தான்'' எண் டான் சுதன் பொதுப்படையாய். ''தம்பி சொல்லுறதிலை முழுக்க உண் மையிருக்கு. சோதினையளும் வலு கூடவில்லே? ஒவ்வொண்டிலையும் ஒவ்வொரு வருத்தம் பிடிபடத்தானே செய்யும்?'' எண்டார் முருகேசர்.

கதை சிக்கலுக்கை போற மாதிரிக் கிடக்க மாஸ்ரர் நெளிஞ்சார். நான் ''அதுசரிதான் ஆஸ்பத்திரிப்பாடுகள் எப்பிடி?'' எண்டு கேட்டதுக்கு மாஸ்ரர் ''கவனிப்புகள் வலு திறம்.. பாசையள் தெரியாமலுக்கே வடி வாய்ப் பாக்குதுகள், எனி டொக்ரர்மாரும் மினக்கெட்டு பாக்கினம்'' எண்டார். ''அவை தங்கடை முழுச் சக்தியையும் பாவிக்கினம் எங்க டையாக்கள்தான் பிரச்சனை, கட்டுப்பாடுகள்.. பழக்க வழக்கங்கள் எண்டு ஒண்டுமில்லை'' எண்டான் சுதன் எரிச்சலோடை.

''ம்ம்.. கண்டபடி துப்புறது, கஞ்சல் போடுறது, செய்யாதையெண்ட



# போர் என்பது தோல்வியின் அடையாளம்

## –கோர்பசெவ்

அரசியல் தூக்கி எறிந்துவிட்டாலும், இறுதிவரை தொடர்ந்து மக்களோடு எழுதியபடி, பேசியபடிதான் இருந்தார் கோர்பசெவ். உலகமே ஓரணியில் திரள வேண்டும் என்பதே அவர் எழுதிய கடைசிக் கட்டுரையின் அடிநாதம். கொரோனா பெருந்தொற்று சமயத்தில் 'டைம்' பத்திரிகைக்காக அவர் எழுதிய இந்தக் கட்டுரையிலும்கூட படைத்துறைக்கான செலவைக் குறைத்து, மக்கள் நலனுக்கான நிதி ஒதுக்கீட்டை உலக நாடுகள் அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். அந்தக் கட்டுரையின் மொழியாக்கத்தை இங்கே தருகிறோம்.

நாம் வாழும் இந்த உலகமயமாக்கப்பட்ட வையகம், பொலபொலவென நொறுங்கி வீழத் தக்கதாக எத்தனை பலவீனமாக உள்ளது; பெருங்குழப்ப பாதாளத்தில் சரிந்து வீழ்கிற பேராபத்து அதனை எவ்வாறு அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்தப் பெருந்தொற்று காலத்தில் கண்டோம். கொரோனா தீநுண்மி உண்டாக்கியிருக்கும் கொள்ளை நோய் எல்லா நாடுகளுக்கும் பொதுவான அச்சுறுத்தலாகக் கோரமுகம் காட்டி நிற்கிறது. எந்த நாடும் இதைத் தனியாக எதிர்கொள்ள முடியாது.

இந்தப் புதிய, கொடிய எதிரியை முறியடிக்க வேண்டியதே இன்றைய உடனடிச் சவால். அதேசமயம், கொரோனாவுக்குப் பிந்தைய வாழ்க்கை குறித்தும், இன்றே நாம் சிந்திக்கத் தொடங்குவது அவசியம். 'உலகம் இனி ஒருபோதும் இதே மாதிரியாக இருக்காது' எனப் பலரும் இப்போது சொல்கிறார்கள். ஆனால் அது எத்தகையதாக இருக்கும்? அது, நாம் என்ன பாடங்களை கற்றுக்கொள்ளப்போகிறோம் என்பதைப் பொருத்தது ஆகும்.

**அணு அச்சுறுத்தலுக்குத் தீர்வு**

நாங்கள் 1980களின் மத்தியில், அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு எப்படித் தீர்வு கண்டோம் என்பதை இங்கே நினைவுகூர விரும்புகிறேன். அது, நமது பொது எதிரி அது, நம் எல்லோருக்குமான அச்சுறுத்தல் என்பதை நாங்கள் புரிந்து கொண்டபோதுதான் தடை தகர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டது.

அணு ஆயுதப் போரில் எவரும் வெல்ல முடியாது என்றும், எனவே

தைத்தான் செய்யிறது எண்டு எங்கடை பரவணிச் சொத்துகள் இருக்கல்லோ?" எண்டு நான் சொல்ல எல்லாரும் சிரிச்சினம். "சாராயத் தவறணையைத் தவிர வரிசையிலை போறபழக்கம் ஒரு இடமும் இல்லை. பாஞ்சு விழுந்து இடிபடுகிறது" எண்டு சுதன் புறுபுறுத்தான்.

"அங்கை விடுதியளின்ரை குளிப்பறை, கழிப்பறை எல்லாம் படுகிறபாடு! இரவிலைதான் எண்டில்லை பகலிலையே தவறணைதான். குப்பைக்கூடையைத் தவிர போத்திலும் சிகரட் கட்டையும்தான் அங்கை. கக்கூஸ் குளீக்குள்ளை சாப்பாட்டு கட்டின பேப்பருகளைப் போடுறது, சிய்க்..." எண்டார் மாஸ்ரர். "துப்பரவாக்கிற ஆக்களும் எத்தினை தரமெண்டு கூட்டுறது அள்ளுறது, எங்களாலைதான் எல்லாப் பிரச்சனையும்" எண்டு மாஸ்ரர் கொஞ்சம் கோவமாச் சொல்லி நிப்பாட்டினார்.

"அதுக்கை கன்ரீனிலை வரிசையும் நிக்கும் குறுக்கையும் பூரும்.. சீயெண்டுபோகும் ஒரு சாமான் வாங்கிறதெண்டால்" எண்டு மாஸ்ரர் முடிக்கயில்லை சுதன் "சுடுதண்ணிக்குச் சனம் படுகிறபாடு" எண்டு வாய் மூடக்கு முதலே "ஏன் கன்ரீனிலை எடுக்கலாமல்லே?" எண்டு கேட்டார் முருகேசர். "எடுக்கலாந்தான் பத்து மணிக்கும் பிறகுதான்" எண்டான் சுதன் எரிச்சலோடை. "ஏன் அதுக்கும் வரிசையள் இடிபாடுகளோ?" எண்டு நான் கேட்டதுக்குச் சுதனோடை சேந்து மாஸ்ரரும் சிரிச்சார்.

நானும் முருகேசரும் அவையின்ரை சிரிப்பை குழப்பத்தோடை பாக்க மாஸ்ரர்தான் "பத்து மணிக்குப் பிறகுதான் சுடுதண்ணி குடுக்கவே தொடங்குவினம். வரிசை இடிபாடில்லாமல் ஒண்டு நடக்குமோ?" எண்டு பிலத்தாச் சிரிச்சார். "அப்ப வருத்தக்காறர் விடிய வெள்ளணத்திலை சூடாய் ஒண்டும் குடிக்கேலாதோ? கோதாரி இரவான் தண்ணி சுடுதண்ணிப் போத்தலெண்டாலும் ஆறியல்லே போகுது? ஒருத்தரும் உதுகளைக் கவனிக்கிறேல்லையோ?" எண்டார் முருகேசர் ஆதங்கத்தோடை.

"ஆராவது பெரிய இடத்தாக்கள் இன்னும் அனுபவிக்கேல்லைப் போலை, அப்பதான் உதுகளை வடிவாய் யோசிப்பங்கள், கவனிப்பங்கள்" எண்டபடி எழும்பி வந்திட்டன்.

ஒருபோதும் அணு ஆயுதங்களைக் கொண்டு போரிடக் கூடாது என்றும் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களும் பிரகடனம் செய்தோம். பின்னர் ரெய்க்ஜாவிக் பேச்சு நடைபெற்றது. அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கான முதல் ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. அதில் 85% சதவீத அணு ஆயுதங்கள் இப்போது ஒழிக்கப்பட்டுவிட்ட போதிலும், அந்த அச்சுறுத்தல் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

இன்னும் வறுமை, ஏற்றத்தாழ்வு, சுற்றுச்சூழல் சீர்கேடு, பூமி வளங்களும் மாகடல்களின் வளங்களும் வற்றிப்போதல், புலம்பெயர்வோர் நெருக்கடி போன்ற உலகளாவிய சவால்கள் தொடர்கின்ற நிலையில், அவை இப்போது மிகவும் அவசர கவனத்துக்கு உரியவையாக மாறியிருக்கின்றன.

**இதுவரை கண்டிராத கொடூர அச்சுறுத்தல்**

அடுத்து இப்போது, ஒரு உலகமயமான வையகத்தில், நாடுகள் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்த உலகத்தில் நோய்களும், பெருந்தொற்றுக்களும் இதுவரை கண்டிராத வேகத்தில் பற்றிப்பரவும் என்பதை உணர்த்துகின்ற இன்னொரு கொடூர அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் புதிய சவாலை ஒவ்வொரு நாடும் தன் அளவில் மட்டுமே எதிர்கொண்டு சமாளித்துவிட இயலாது. இதனை எதிர்கொள்வதற்கான முடிவுகளை உலக சமுதாயம் முழுவதுமே இனி எடுக்க வேண்டியிருக்கும்.

மனிதகுலம் அனைத்துக்கும் பொதுவான வியூகங்களை, இலக்குகளை உருவாக்கிச் செயல்படுத்துவதற்கு இதுவரையில் நாம் தவறிவிட்டோம். கடந்த 2000ஆவது ஆண்டில் ஐ.நா. சபை நிறைவேற்றிய புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை நோக்கிய முன்னேற்றம் பெரிதும் சரிசமமற்றதாகவே இருந்து வருகிறது. இந்தக் கொள்ளை நோயும் அதன் விளைவுகளும் குறிப்பாக ஏழை மக்களை கடுமையாகத் தாக்கி, ஏற்றத்தாழ்வு விளைவித்த புண்ணில் வேல் பாய்ச்சியுள்ளது.

பாதுகாப்பு குறித்த கருத்தோட்டம் முழுவதையும் மறுசிந்தனைக்கு உள்ளாக்க வேண்டியதே இப்போது நமக்கு அவசர அவசியத் தேவை ஆகும். பனிப் போர் முடிவுக்கு வந்த பிறகும்கூட, உலக நாடுகளின் பாதுகாப்பு என்பது பெரிதும் படைத்துறைக் கண்ணோட்டத்திலேயே பார்க்கப்படுகிறது. பாதுகாப்பு என்றாலே, நம் காதில் விழுபவை எல்லாம் ஆயுதங்கள், ஏவுகணைகள், விமானத் தாக்குதல்கள் என்கிற பேச்சுக்கள்தான்.

ஈரான், ஈராக் மற்றும் சிரியாவில், இந்த ஆண்டில் வல்லரசுகள் ஈடுபடக்கூடிய கடும் மோதல்கள் ஏற்படலாம் என்ற அளவுக்கு உலகம் ஏற்கெனவே மோதல்களின் விளிம்புக்கே சென்றுவிட்டது. அதில் பங்கேற்றவர்கள் இறுதியில் பின்வாங்கி விட்டபோதிலும், இது போருக்குப் போகாமலும் அதேவேளையில் போரின் எல்லை வரையிலும் இழுத்துச் செல்லும் அபாயகரமான, சிறிதும் யோசிக்காமல் செயல்படுகிற அதே கொள்கைதான்.

**பணத்தை விரயமாக்கும் ஆயுதப் போட்டி**

போர்களும், ஆயுதப் போட்டிகளும் இன்றைய உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பது இன்னுமா தெளிவாகவில்லை? போர் என்பது தோல்வியின் அடையாளம்; அது, அரசியலின் வீழ்ச்சி ஆகும்.



உணவு, தண்ணீர் மற்றும் தூய்மையான சுற்றுச் சூழலை வழங்குதல், மக்களின் உடல் நலத்தில் அக்கறை என மனித குலத்தின் பாதுகாப்பையே மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் முன்னுரிமைக்குரிய இலக்காகக் கருத வேண்டும். இவற்றை அடைவதற்குத் திட்டமிட்டு வளங்களைச் சேமிப்பதும் உருவாக்குவதும், வியூகங்களை வகுப்பதும் அவசியம். ஆனால், ஆயுதப் போட்டியைத் தூண்டுவதற்கு அரசுகள் தொடர்ந்து பணத்தை வீணடிக்கும் என்றால் அனைத்து முயற்சிகளும் தோல்வியுறும். ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்வதற்கு நான் ஒருபோதும் தளர்வடைய மாட்டேன். உலக விவகாரங்கள், சர்வதேச அரசியல் மற்றும் அரசியல் சிந்தனையில் இருந்து படைமயம் என்பதை அகற்ற வேண்டியது அவசியம்.

படைத்துறைச் செலவுகளைக் குறைந்தது 10% முதல் 15% வரை குறைக்க வேண்டும் என உலகத் தலைவர்களை அறைகூவி அழைக்கிறேன். புதிய விழிப்புணர்வை நோக்கி, புதிய நாகரிகத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும் முதல் நடவடிக்கையாக, இப்போதைக்கு குறைந்தபட்சம் இதையாவது உலகத் தலைவர்கள் செய்தாகவேண்டும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.09.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781